# இந்தியாவைத் தவிர்க்க இலங்கையின் துணிச்சலான

## இராஜதந்திர உறவுகள்!

இனப்பிரச்சினை, இலங்கையின் வெளிநாட்டு உறவுகளை அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

1983 ஜூலையில் இடம்பெற்ற தமிழர் படுகொலையைத் தொடர்ந்து, இரண்டு இனங்களும் நிரந்தரமாகவே பிரிந்துவிட்டன.

உள்ளூர்ப் பிரச்சினையின் புதிய காரணி இந்தியாவில் உள்ளது.

இந்தியாவின் பங்கு பற்றி சிங்களத் தலைவர்கள் சந்தோஷமாக இல்லை.

தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடக்கூடிய அளவுக்கு தமிழருக்குப் போதியளவு சலுகைகளை இலங்கை வழங்க வேண்டியது அவசியம் என்று இந்தியா விரும்புகிறது.

இந்தியாவைத் தவிர்ப்பதற்காக இலங்கை துணிச்சலான ராஜதந்திர உறவுகளை சிலநாடுகளுடன் ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா ராஜதந்திர உறவுகளை வைத்துக்கொள்ள மறுக்கும் இஸ்ரவேல், தென் ஆபிரிக்க நாடுகளுடனும்,

தென் ஆசியப் பிராந்தியத்தில் அங்கீகரிக்கப்பட்ட பெரிய சக்தியாக இந்தியா வருவதை எதிர்க்கும் நாடுகளுடனும், இலங்கை ராஜதந்திர உறவுகளை வைத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

சிங்கள உயர்மட்டத்தின் குறுகிய இனதேசியவாதம் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பில் செல்வாக்கு வகிக்கின்றது.

**உயர்மட்டக் கணிப்பு**

இந்த உயர்மட்டம், இந்தியாவை இரண்டு வகைகளில் எதிரியாக கணிக்கின்றது.

இலங்கையை இந்தியா ஆக்கிரமிக்கும் என்பது முதலாவதாகும். இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கை முக்கியமானது. காஷ்மீர், கோவா, ஹைதராபாத் ஆகியவற்றுக்கு எதிராக இந்தியா பொலிஸ் நடவடிக்கை எடுத்தது.

அதேமாதிரி இந்தியா, இலங்கை விஷயத்திலும் நடக்கக்கூடும்.

இதை இன்னும் பிரச்சினையாக்குவது தமிழ் நாட்டின் ஐந்து கோடி தமிழர் சாம்ராஜ்ஜியம் என்ற உண்மையே ஆகும்.

செக்கோசிலோவாக்கியாவில் இருந்த நாஸி ஜேர்மனிக்கு உதவிய சுடேற்றன் ஜேர்மனியர் போன்ற இலங்கையில் உள்ள தமிழர் தமிழ் நாட்டுக்கு உதவுகின்றனர் என்று சிங்கள உயர்மட்டம் குற்றஞ் சாட்டுகிறது.

இந்திய சமஷ்டியில் தமிழ்நாடு ஒரு பகுதி தான் என்பது கவனிக்கப்படுவதாக இல்லை.

இரண்டாவது, இந்தியாவின் தேசிய நலன்களுக்கு எதிரான எந்த வெளிநாட்டுக் கொள்கையையும் இலங்கை கடைப்பிடிக்க இந்தியா அனுமதிக்காது என்பது இலங்கை அரசுக்கு கவலையைத் தான் கொடுத்துள்ளது.

இதில் இந்தியா, இலங்கையை வெற்றிகரமாக 'பின்லாந்துமாதிரி' (Finlandized) ஆக்கியுள்ளது.

எப்படி இருந்தாலும் இந்தியாவுக்கு எதிராக திட்டமிட்டு இலங்கை செயல்பட இன்னமும் இடமுள்ளது.

> கலாநிதி ஏ. ஜெயரட்ணம் வில்சன், அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர். கனேடியப் பல்கலைக்கழகம் ஒன்றில் பணிபுரிகிறார். தந்தை செல்வாவின் மருமகன். இலங்கை பற்றி லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவர் சங்கம் நடத்திய கருத்தரங்கு ஒன்றில் பேராசிரியர் வில்ஸன் அண்மையில் உரையாற்றினார்.
>
> இலங்கை: அதன் எதிர்காலமும், சர்வதேச பிரிவுகளும் என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய உரையின் முதற்பகுதி இங்கு பிரசுரமாகிறது.

### பேராசிரியர் ஏ. ஜே. வில்ஸன்

**பாதுகாப்பு ஒப்பந்தம்**

1948 இல் பிரிட்டன், இலங்கைக்கு சுதந்திரம் கொடுக்கும் முன்னர், பிரிட்டனும் இலங்கையும் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையைச் செய்து கொண்டன.

அதன்படி கடற்படை, விமானப்படைத் தளங்கள் பிரிட்டனுக்கு வழங்கப்பட்டன.

இதற்குப் பதிலாக, ஆக்கிரமிப்பு நேரத்தில் இலங்கையின் பாதுகாப்புக்கு உதவ முன்வருவதாகப் பிரிட்டன் உடன்பட்டது.

அன்றைய இலங்கைப் பிரதமர், இலங்கை-பிரிட்டன் பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிப் பின்வருமாறு சொன்னார்:

'சோவியத் ரஷ்யாவின் பயம் காரணமாகத்தான் இந்த உடன்படிக்கை செய்யப்பட்டது' — இப்படி அன்றைய பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா சொன்னார்.

**இந்தியா பற்றிய பயம்**

உண்மையில் இந்தியா பொலிஸ் நடவடிக்கை எடுக்கும் என்ற பயத்தினால் தான் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

அப்படி இந்தியா ஆக்கிரமித்தால், இந்தியாவுக்கு எதிராக பிரிட்டன் இலங்கையின் சார்பில் யுத்தம் ஒன்றில் ஈடுபடும் என்பது நடக்கக்கூடியது தோன்றவில்லை.

ஆகக் கடினமான, பிரிட்டன் ராஜதந்திர நெருக்குதலைத்தான் கொடுக்கும்.

1956 இல் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா யு. என். பியைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினார். அதன் பின்னர் தளங்களை பிரிட்டனிடம் இருந்து திரும்பப் பெறுவதில் வெற்றி கண்டார்.

ஆனால் இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு உடன்படிக்கை அப்படியே இருந்தது.

தற்போதைய இனப்பிரச்சினையில் இலங்கை தாக்கப்பட்டால் அந்த உடன்படிக்கையைத் தான், தான் மீண்டும் புதுப்பிக்கப்போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறுகிறார்.

சிங்களவருக்கு மனத்திடத்தை ஏற்படுத்தத் தான் இந்த அறிக்கை உண்மையில் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கைக்கு வேறு அர்த்தம் இடையாது.

**சீனாவின் உதவி**

இலங்கையை இந்தியா ஆக்கிரமித்தால் மக்கள் சீனக் குடியரசு இலங்கைக்கு உதவும் இப்படி தனிப்பட்ட சம்பாஷணையின் போது இலங்கைத் தலைவர் ஒருவர் சொன்னார்.

திருமதி பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த 1960 – 65 காலகட்டத்தில் இனப்பிரச்சினை ஏற்பட்டபோது இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

1983 ஜூலையின் பின்னர் ஜனாதிபதியின் தம்பி திரு. எச். டபிள்யு. ஜெயவர்த்தனா ஆசியான் அமைப்பு நாடுகளுக்கு விஜயம் செய்த சமயம் பீகிங்குக்கும் விஜயம் செய்தார். அப்போது இச்சாத்தியக்கூறு பற்றி ஆராயப்பட்டது.

ஜனாதிபதியே 1984 இல் பீகிங் சென்றார்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் வெளிச்சக்திகளின் தலையீடு கூடாதென்பது தான் மக்கள் சீனக் குடியரசின் நிலை.

ஐக்கிய இலங்கைக்குத் தான் ஆதரவு; தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிர்ப்பு — இப்படிக் கூறி



ஏ. ஜே. வில்சன்

தனது நிலையை சீனா உறுதிப்படுத்தியது இந்தியா இதே நிலையைத்தான் எடுத்துள்ளது பீகிங்கின் நிலை சிங்களவர்களுக்குத் திடமான உறுதிமொழியை அளிப்பதாகவே கருத முடியும்.

இராணுவ ரீதியில் பீகிங் சம்பந்தப்பட முடியுமா? என்பது கேள்விக்குறியே.

பாகிஸ்தானுக்கும் பீகிங்குக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று உண்டு. அப்படி இருந்தும் பங்களாதேஷ் உருவாக்கப்பட்ட சமயம் மக்கள் சீனா தலையிடவில்லை.

**எச். டபிள்யு. விஜயத்தின் நோக்கம்**

புதுடில்லியை கண்காணிப்புக்குள் வைக்கும் முயற்சியாகவே ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒரு கொள்கையை வகுத்திருக்கிறார்.

டாக்டர் எச் டபிள்யு. ஜெயவர்த்தனா ஆசியான் அமைப்பு நாடுகளுக்கு விஜயம் செய்தது, வெறுமனே இனப்பிரச்சினை பற்றியும் தனிநாட்டுக் கோரிக்கை பற்றியும் எடுத்துச் சொல்வதற்கு மட்டும் அல்ல.

இனப்பிரச்சினை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்பப்படும் சமயம் இலங்கைக்கு ஆதரவு தேடுவது தான் ஆசியான் அமைப்பு நாடுகளுக்கான விஜயத்தின் நோக்கம்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் மக்கள் சீனாவின் ஆதரவு முக்கியமாகத் தேவை.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு ஆதரவாக மக்கள் சீனா வாக்களிக்கும் என்பது சாத்தியமானது.

அதே நேரத்தில் 1971 இல் இந்தியாவுடன் ரஷ்யா செய்து கொண்ட நட்பு உடன்படிக்கையும் இருக்கின்றது.

1984 இல் திரு ஜெயவர்த்தனா அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் விஜயம் செய்து அதிபர் றேகனையும் பிரதமர் மார்கரட் தச்சரையும் முறைப்படி சந்தித்தார்.

முறைப்படியாக உடன்பாடு எதுவும் கைச்சாத்திடப்படவில்லை. ஆனால் அவ்விஜயத்தினால் சில சலுகைகள் கிடைத்து இருக்கலாம்.

அதிபர் றேகனைச் சந்தித்த பின்னர்தான் இஸ்ரவேலின் இரகசிய புலன் விசாரணைப் பிரிவான மொஸாட், இலங்கை ஆயுதப்படையினருக்குப் பயிற்சியை வழங்க ஆரம்பித்தது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தினுள் இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவு ஒன்றும் திறக்கப்பட்டது.

இந்த ஒழுங்குகள் இலங்கை அரசுக்குப் பாதகமான பலன்களை ஏற்படுத்தியது.

இலங்கையில் ஏழு சதவீதமான முஸ்லீம்கள் உள்ளனர். இஸ்ரவேலியர்கள் கொழும்பு வந்தது முஸ்லிம்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது.

சவூதி அரேபியாவை இது தனிமைப்படுத்தியது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்துக்கு 5 கோடி டாலர் நிதி உதவி அளிப்பதாக சவூதி அரேபியா முன்னர் ஒப்புக்கொண்டது. இந்த உறுதிமொழியில் இரு

(7 ஆம் பக்கம் பார்க்க)

## இப்படியும் எண்ணிப் பார்க்கலாம்.....

அண்மைக்காலமாக எமது மண்ணில் நிகழ்ந்த அரசியலுக்கு புறம்பான சில சம்பவங்கள் எம்மை அதிகளவு பாதித்துள்ளன. இதை மிகுந்த மன வேதனையுடனேயே இங்கு குறிப்பிடுகின்றோம்.

சிவில் நிர்வாகம் இங்கு அற்றுப் போனது உண்மை தான் அது எவ்வாறு சீர் குலைந்து போனது என்பதற்கான புற நிலைக் காரணிகள் நாங்கள் அனைவரும் அறிந்தவையே ஆனாலும் அந்த நிர்வாக உடலை சரிவரப் பயன்படுத்தத் தெரியாது எமது மக்களும், சில விடுதலை ஸ்தாபனங்களும் நடந்து கொண்ட விதம் பற்றியே இங்கு நாம் கவலைப்படுகின்றோம். குடா நாட்டின் தொலைபேசித் திட்டங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன. அதன் செம்புக்கம்பிகள் உருக்கப்பட்டும் கம்பங்கள் அடுப்புக்கரியாக்கப்பட்டும் போனது நாம் அறிந்ததே. இவை 'அரசின் சொத்து' என்ற முட்டாள் கருத்து நம்மவர்களை தடுமாற வைத்துள்ளது அல்லது அது ஒரு போலிச் சாட்டு என்றே கருத வேண்டியுள்ளது. விடுதலைக்கு பின்னர் தொடர்புச் சாதனங்கள் எமக்குத் தேவையில்லையா? இதைப்போலவே எத்தனையோ 'அரசின் சொத்து'க்கள் சூறையாடப்படுகின்றன சிலர் பணம் பண்ணுவதற்கும் ஏதுவாகின்றன.

மண்டைதீவில் அமைந்திருந்த வானொலி பரிமாற்ற நிலையக் கட்டடத்தை சென்று பாருங்கள். முதலில் கூரையிலிருந்த ஓடுகள், பின்னர் மரத்தளபாடங்கள் இறுதியாக சீமெந்துக் கற்கள் உடைக்கப்பட்டு, உருப்படியான ஒரு கட்டடம் சிதைக்கப்பட்டு விட்டது. அது எங்களுக்கு ஒரு காலத்தில் பயன்படாதா?

இதைப் போல இன்னுமொரு உதாரணம் யாழ்ப்பாண சிங்கள மகா வித்தியாலயம் அமைந்திருந்த கட்டடம் எத்தனையோ சின்னஞ்சிறார் வெள்ளைச் சோலவுடை தரித்து ஓடித் திரிந்த இடம் வேற்று மொழியாளேனும் கல்வியை வாரி வழங்கிய ஒரு கூடம். எத்தனை ஆய்வு கூடங்கள் 'கிரிபத்' சமைத்து அயலவருக்கு வழங்க ஏதுவாக இருந்த பனையியல் பயிற்சிக் கூடம். இவைகளை எப்படி மறப்பது? அக்கட்டடம் எங்கள் சிறார்களுக்கு பயன்படாதா? இதெல்லாம் விடுதலையைக் காட்ட வந்தவரின் கண்களுக்குத் தெரியவில்லை. உயிருள்ள மனிதனை வெட்டுவது போல அக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகின்றது

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 42. 41 |
| அமெ. டாலர் | 27. 71 |
| இந்திய ரூபா | 02. 24 |
| மார்க் (ஜெர்மனி) | 12. 56 |
| அவுஸ். டாலர் | 20. 27 |
| கனடா டாலர் | 19. 87 |
| பிராங் (பிரெஞ்சு) | 03. 94 |
| பிராங் (சுவிஸ்) | 15. 07 |

## நீண்ட ஆயுள்தரும் கனிப்பொருள்

நீண்ட ஆயுளைத் தரும் அரிய கனிப்பொருள் ஒன்று பீகிங்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

400 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தக் கனிப்பொருள், நீண்ட ஆயுளைப்பெறவும் தொல்லை தரும் நோய்களைத் தீர்க்கவும் பயன்படுத்தப்பட்டு வந்தது

பின்னர் மறக்கப்பட்டு விட்டது.

சீனாவின் பங்கோசியா மாநிலத்தின் சிலபகுதிகளில் வாழும் மக்கள் இந்தக் கனிப்பொருள் நிறைந்துள்ள கிணற்றில் இருந்து எடுக்கப்பட்ட தண்ணீரைக் குடித்து வருகிறார்கள்

அந்தக் கனிப்பொருளுக்கு Wheatball Stone என்று பெயர்.

இந்தத் தண்ணீரைக் குடிப்பவர்கள் சராசரி 83 வயதுவரை வாழ்கின்றனர்.

ஆனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்பவர்களின் சராசரி வயது 63 வருடங்கள்தான்.

### முடி வெட்டுவதில் சாதனை

இங்கிலாந்தை சேர்ந்த கேரி ஹார்லே என்பவர் உலகின் மிக வேகமாக முடி வெட்டும் தொழிலாளி என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார்.

அவரது சாதனை என்ன தெரியுமா? ஒரு மணி நேரத்துக்குள் 45 பேரின் தாடியை மழித்துத் தள்ளியிருப்பது தான்.

### விடுமுறை தினம்

வாரத்தில் விடுமுறை ஒருநாள்.

நாட்டிற்கு நாடு இந்த விடுமுறைத்தினம் மாறுபடுகிறது சில விடுமுறைத் தினங்களை பார்ப்போமா?

இலங்கை — ஞாயிறு<br>
கிரீஸ்— திங்கள்<br>
சைப்ரஸ் — செவ்வாய்<br>
ஈரான்— புதன்<br>
எகிப்து— வியாழன்<br>
துருக்கி— வெள்ளி<br>
இஸ்ரவேல்— சனி

## பஞ்சாமிர்தம் பலாசுவமிர்தம்

# சுவையான சில தகவல்கள்

மத்திய ஆபிரிக்காவில் காங்கோ பிரதேசங்களில் 'செட்சே' எனும் ஈக்கள் இருக்கின்றன. இந்த ஈக்கள் கடித்தால் மனிதர்களும் விலங்குகளும் இரவும் பகலும் தூங்கிக் கொண்டே இறப்பார்கள். ஒரு தூக்க நோய் வந்துவிடும்.

* * *

காட்டில் வேட்டைக்காரர்கள் வைத்திருக்கும் இரும்புப்பொறியில் தப்பி தோசமுடியாதபடி நரி மாட்டிக்கொண்டு விட்டால், மாட்டிக்கொண்ட இடத்துக்குமேலே காலைக் கடித்துத் துண்டாக்கி, தன்னை விடுவித்துக் கொண்டு ஓடிவிடுமாம்.

* * *

இங்கிலாந்தில் ஸ்மித் பீல்ட் என்றும் இடத்திலுள்ள மாதா கோவிலில் டாக்டர் எட்வர்ட் கோக் என்பவருக்கு சிலை நிறுவியிருக்கின்றார்கள். அந்த சிலையின் கண்கள் மிகவும் நுட்பமான கற்களால் செய்யப்பட்டு இருக்கின்றன. அந்தக் கற்கள் காற்று மண்டலத்திலுள்ள ஈரத்தை வெளியில் இழுத்துக் கொண்டு பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நீர் துளிகளை வெளியிடுகிறது. இது பார்ப்பவர்களுக்கு இந்தச் சிலையே கண்ணீர் சிந்தி அழுவது போல் தோன்றுமாம்.

* *

ஆயிரம் என்ற இலக்கத்தை 7, 699 ஆல் பிரிக்கால் வரும் விடை 7, 699 எண்களைக் கொண்டதாக இருக்கும்.

தொகுப்பு:<br>
கோவை: பா. ரமணன்

## திருமண வாழ்வில் அடிக்கடி அலுப்பு

திருமணமாகி ஏழு வருடங்களுக்குப்பின் கணவனுக்கு மனைவி மீது அலுப்புத் தட்டுமாம். இதை ஆங்கிலேயர் ஏழு வருட அலுப்பு என்பர் (Seven year itch).

கிளிவுஸ் 70 வயதுக் கிழவர் இவர் இந்த வயதில் ஒரு மணமகளைத் தேடிக் கொண்டிருக்கிறார். கடந்த 1927 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 24 தடவை திருமணம் செய்து இருக்கிறார்.

அவர் ஒரு பெண்ணுடன் அதிக காலம் வாழ்ந்த மணவாழ்க்கை 5 ஆண்டுகளே—குறுகிய கால மணவாழ்க்கை 7 நாட்களே!

### அதிக காலம் உறங்கும் பிராணி

உலகின் அதிக காலம் உறங்கும் பிராணி வட ஆபிரிக்காவிலுள்ள ஒரு தீவில் வாழும் 'மர்மோட்' அது சுமார் ஏழு மாத காலம் சேர்ந்தாற் போல் உறக்கத்தில் ஆழ்ந்து விடும்.

### அதிபரின் துணிச்சல்

தாமதமாக பள்ளிக்கூடம் வரும் மாணவனுக்கு தண்டனை கொடுப்பார்கள் ஆசிரியர்கள்.

ஆனால் ஆசிரியரே தாமதமாக வந்தால் கட்டுவிடு என்று இந்தியாவிலுள்ள ஊரிலுள்ள ஒரு பள்ளித் தலைமையாசிரியர் கட்டளை பிறப்பித்தார். அதுடன் நின்றுவிடவில்லை, தாமதமாக பள்ளிக்கு வந்த ஒரு ஆசிரியரை கண்டித்து விட்டார்.

## பல் தேடி அலையும் ஜப்பானிய மாணவர்

பல் இல்லாத பிரச்சினை ஜப்பானில் பல் வைத்திய மாணவரைப் பாடாதபாடு படுத்துகிறது.

ஜப்பானில் உள்ள பல் வைத்தியக் கல்லூரிகளில் ஆராய்ச்சிக்கு பிடுங்கப்பட்ட இயற்கைப் பற்கள் நிறையத் தேவை.

ஆனால் இவற்றுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

டோக்கியோ நிப்பன் பல்வைத்தியக் கல்லூரியில் படிக்கும் ஒரு மாணவனுக்கு 50 பற்கள் ஆராய்ச்சிக்குத் தேவைப்பட்டன.

ஆனால் அவரால் ஐந்து பற்களைத்தான் பல் வைத்தியசாலைகளில் இருந்து சேகரிக்க முடிந்தது

பற்கள் ஈழுதாவது குறைந்து வருவதே இதற்குக் காரணமாகும்.

பற்கள் சொத்தையாவது குறைந்து வருகிறது. பல் வைத்தியத்துறை அபிவிருத்தியினால் ஜப்பான் மக்களின் பற்கள் பழுது படாமல் இருக்கின்றன.

[illegible]

### துப்பு துலக்க புதிய வழி

லேசர் கதிர்களைப் பாவித்து குற்றவாளிகளின் கைவிரல் அடையாளங்களைப் பரிசோதனை செய்யும் புரட்சிகர பொலிஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மனிதக் கண்களுக்குப் புலப்படாத முறையில் மரப்பலகைகள்புடைவைகள், தோல் முதலியவற்றில் கைவிரல் அடையாளங்களை கண்டுபிடிக்கவே லேசர் கதிர்கள் பாவிக்கப்படுகின்றன.

துப்புத் துலக்க முடியாத பல குற்றச் செயல்களை லேசர் கதிர் மூலம் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

### பல இன மக்கள்

மஸ்கோவின் கிரெம்லின் மாளிகையில் 176 இனத்தைச் சேர்ந்தவர்கள் வேலை செய்கிறார்கள் இவர்கள் 200விதயாசமான மொழிகளில் உரையாடுகின்றார்கள்.

## பிலிப்பீன்ஸ்

### அமைதியற்ற நாடு

உலகில் அமைதியற்ற நாடாக பிலிப்பீன்ஸ் திகழ்கிறது.

அரசியல் கொந்தளிப்பால் மட்டுமல்ல, இயற்கைக் கொந்தளிப்பாலும் அமைதியிழந்த நாடு அதுதான்.

சென்ற ஆண்டு பிலிப்பீன்ஸில் 17 தடவைகள் சூறாவளி, நில நடுக்கங்கள், வெள்ளப்பெருக்குகள் நிலச்சரிவுகள், கடற் கொந்தளிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

94 இயற்கை அழிவுகளால் 1.5 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர். சென்ற ஜூன் மாதம் இடம் பெற்ற சூறாவளியே மிக அதிக அழிவுகளை விளைவித்தது இதனால் 2 லட்சத்து 40 ஆயிரம் வீடுகள் விடிமுந்தன. பயிர்ச் செய்கை பெரும் அளவு அழிவுக்குள்ளானது.

25079

25080

25088

25089

25097

25098

இவை அனைத்தும் உங்களுக்கு உலகத் தொடர்பு தர இரவு பகல் 24 மணி நேரமும் சுழன்று சுழன்று உழைக்கும் ரெலிகுளோப் ரெலிபோன் இலக்கங்கள்

பல எண்கள் கொண்ட பல கூட்டிலக்கங்கள்! ஞாபகத்தில் வைத்திருக்க சிரமமாய் இருக்கிறதா? இவற்றை இலேசாக்க-நானே உதயன் 2ஆம் பக்கம் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாய நாடுகளின் அரசியல் யாப்புகளில் சமஷ்டி

## பெரிய நாடான ரஷ்யாவில் மட்டுமல்ல சிறிய சுவிற்சர்லாந்திலும் வெற்றியளித்துள்ளது இது

இந்தியா பிரித்தானிய பொதுநலவாய நாடுகளில் ஒன்று. அவ்வாறே வேறு நாடுகளும் உண்டு. இந்நாடுகளில் வெவ்வேறு ஆட்சி முறைகள் நிலவுகின்றன. சில நாடுகளில் ஒற்றையாட்சியும் வேறுசில நாடுகளில் பல்வேறு வித சமஷ்டி ஆட்சியும் நிலவுகின்றன.

பிரித்தானியாவில் நிலவுவது ஒற்றையாட்சி. ஆனால் அவுஸ்திரேலியா, கனடா போன்ற பொதுநலவாய நாடுகளில் சமஷ்டி ஆட்சி நிலவுகின்றது.

அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை சுயாட்சி அடிப்படையில் இயங்கும் ஆறு மாநிலங்களின் சமஷ்டி அரசே அவுஸ்திரேலிய (காமன்வெல்த்) அரசாகும். அவுஸ்திரேலிய சமஷ்டி அரசின் சட்டவாக்க அதிகாரம் இருசபைகளிடம் உண்டு. ஒன்று மக்கள் பிரதிநிதிகள் சபை. மற்றது செனற் சபை.

மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தினர்கள் சனத்தொகை அடிப்படையில் தெரிவு செய்யப்படுகிறார்கள். எனவே இச்சபையில் உள்ள அங்கத்தவர்கள் தொகை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். செனற்சபையில் மாநிலங்களின் அங்கத்தவர்கள் தொகை ஒன்றுக்கு ஒன்று சமானமாக உள்ளது. அதாவது பெரிய மாநிலங்களுக்கும் சிறிய மாநிலங்களுக்கும் ஒரே தொகையான அங்கத்தவர்களே உண்டு. இந்த வகையில் அவுஸ்திரேலிய செனற் சபை மாநிலங்கள் அவையாகவே இருக்கின்றது.

### அவுஸ்திரேலியாவில் அதிகாரப் பகுப்பு

அவுஸ்திரேலியாவின் அதிகாரப்பிரிவினை அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியல் யாப்பில் அவுஸ்திரேலிய சமஷ்டி அல்லது மத்திய அரசிற்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ள அதிகார விடயங்களில் மட்டுமே சமஷ்டி அல்லது மத்திய அரசு சட்டவாக்க அதிகாரம் உடையதாயிருக்கிறது. ஆகவே இவ்வித யாப்பின்படி மத்திய அரசிற்கு கொடுபடாத அதிகாரங்கள் யாவும் மாநிலங்களுக்கே உண்டு. அதாவது எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கே உண்டு. மாநிலங்களுக்கும் மத்திய அரசிற்கும் ஆக இரண்டிற்கும் உள்ள அதிகார விடயங்களில் முரண்பாடு ஏற்படின் மத்திய சட்டங்களே செல்லுபடியாகும்.

அவுஸ்திரேலிய காமன்வெல்த் (மத்திய அரசு) மக்களின் பெரும்பான்மையினரும் - மாநிலங்களின் பெரும்பான்மையானவற்றின் பெரும்பான்மை மக்களும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பில் பெரும்பான்மையாக வாக்களிக்குமிடத்து அவுஸ்திரேலிய யாப்பை மாற்றியமைக்க முடியும். இந்த முறை இலகுவானதல்ல என்பது தெளிவு—பெரும்பான்மை மத்தியிலும் வேண்டும், மாநிலங்களிலும் வேண்டும் - அத்தகைய மாநிலங்களிலும் பெரும்பான்மை பக்க அங்கீகாரம் வேண்டும். ஆயினும் மாநிலங்களின் பிரதிநிதித்துவ எண்ணிக்கையையோ அல்லது மாநிலங்களின் எல்லைகளையோ சம்பந்தப்பட்ட மாநிலங்களில் உள்ள பெரும்பான்மையான வாக்காளர் சம்மதித்து வாக்களித்தாலன்றி மாற்ற முடியாது. 1931 ஆம் ஆண்டின் வெஸ்ட்மினிஸ்டர் சட்டத்தின்படி அவுஸ்திரேலிய காமன்வெல்த் அரசிற்கு - மாநிலங்களின் அதிகாரத்திற்குட்பட்டனவும் காமன்வெல்த்திற்கு இல்லாதனவுமான அதிகார விடயங்கள் எவற்றிலும் சட்டமியற்ற அதிகாரமில்லை என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன் விளைவு என்னவெனில் அவுஸ்திரேலிய யாப்பை மாற்ற வழிகள் சொல்லப்பட்டுள்ளபோதிலும் - அவ்வரசின் சமஷ்டி அரசியல் அமைப்பை சட்டரீதியாக மாற்றக்கூடிய அதிகாரம் இல்லை என்

**செ. கோடீஸ்வரன்**
(சட்டத்தரணி)

தாகும். இவ்வகையில் பார்க்கும் பொழுது அவுஸ்திரேலிய மாநிலங்களின் அதிகாரமும் அவற்றின் தனித்துவமும் பாதுகாக்கப்படுகின்றன. இத்தகைய மாநில பாதுகாப்புக்கள் வழங்கப்பட்ட போதும் அவுஸ்திரேலிய மாநிலங்கள் இந்தியாவில் உள்ளது போன்று வெவ்வேறு இன-மொழி மாநிலங்கள் அல்ல. அவுஸ்திரேலிய பூர்வீக குடிகளான 'டஸ்மேனியன்ஸ்' இன்று அழிந்துவிட்ட இனமாகும். அவுஸ்திரேலிய மக்கள் பிரித்தானியாவிலிருந்து குடியேறியவர்கள் தாம்.

### கனடாவில் சமஷ்டி

பொதுநலவாய நாடுகளில் இன்னொன்று கனடா. இங்கும் ஒருவகை சமஷ்டியே நிலவுகிறது. கனடாவில் பத்து மாநிலங்கள் உள்ளன. அவை சுயாட்சி அடிப்படையில் இயங்குகின்றன. மாநிலங்கள், அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகார வரம்பிற்குள்ளான விடயங்களைப் பொறுத்தவரையில் ஆதிக்கமுடையன. மாநிலங்களுக்குரிய அதிகார விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விடயங்களில் மத்திய அரசு சட்டமியற்ற முடியாது. மத்திய அரசிற்கு குறிப்பிட்ட விடயங்களில் சட்டமாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் மாநிலங்களுக்கு சட்டவாக்க அதிகாரம் வழங்கப்படாத விடயங்களில் சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதை இன்னொரு வகையில் சொன்னால் எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசிற்கே உண்டு.

கனேடிய அரசியல் யாப்பை மாற்றும் அதிகாரம் கனேடிய மத்திய நாடாளுமன்றத்திற்கு உண்டு. ஆயினும் மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்ட விடயங்களையோ - அல்லது மாநில அவைகளின் அல்லது அரசுகளின் சட்டரீதியான உரிமைகள் பற்றியோ, அல்லது கல்லூரிகள் மற்றும் ஆங்கில பிரஞ்சு மொழிகள் உபயோகம் பற்றியோ அல்லது நாடாளுமன்ற கால எல்லைப்பற்றியோ யாப்பில் மாற்றங்கள் செய்யும் அதிகாரம் மத்திய நாடாளுமன்றத்திற்கு இல்லை. இந்தியாவில் பார்க்கும் பொழுது - அதாவது மத்திய நாடாளுமன்றத்திற்கு யாப்பில் மாற்றங்கள் செய்யும் அதிகாரம் வரையறுக்கப்பட்டிருக்கும் வரை மாநிலங்கள் யாப்பு ரீதியாக மத்திய அரசு மாநில அதிகாரங்களை கட்டுப்படுத்தக் கூடிய வாய்ப்பில்லை.

பிரித்தானிய பொதுநலவாய நாடுகளில் காணக்கூடிய சமஷ்டி அரசியல் யாப்புக்கள் சிலவற்றில் காணக்கூடிய அதிகாரப்பிரிவினை சம்பந்தமான சில விடயங்களை இங்கு கவனித்தோம்.

சமஷ்டி ஆட்சி முறை பிரித்தானிய பொதுநலவாய நாடுகளுக்கோ அல்லது பிரித்தானிய குடியேற்றவாசிகளின் நாடுகளுக்கோ மட்டுமே உரியதான ஒரு அரசியல் முறையல்ல.

பிரித்தானியாவின் அரசியல் வழமையினாலும் - சிந்தனையாலும் - மரபுகளாலும் கட்டுப்படாத நாடுகள் சிலவற்றிலும் சமஷ்டி ஆட்சிமுறை நிலவுகிறது.

### சுவிற்சர்லாந்தில் சமஷ்டி

இவ்வகையில் முக்கியமாகக் கருதப்படுவது சின்னஞ்சிறு நாடான சுவிற்சர்லாந்தும் பென்னம்பெரிய நாடான ருஷ்யாவுமாகும்.

இந்நாடுகளில் பல்வேறு இன, மொழி பேசும் மக்கள் வாழ்கின்றார்கள். இலங்கையிலும் பார்க்க சிறிய நாடான சுவிற்சர்லாந்தில் நான்கு மொழி பேசும் மக்கள் வசிக்கின்றனர். பிரஞ்சு, ஜேர்மன், இத்தாலி, ரோமான்ச் என்ற நான்கு மொழி பேசும் மக்கள் வசிக்கின்றனர். இங்கு ஆட்சி அதிகாரம் சிறு சிறு மாநில அரசுகளிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றது. சுவிற்சர்லாந்து அரசைப்பற்றி

(7 ஆம் பக்கம் பார்க்க)

---

### இணையுங்கள், எழுங்கள்!

போராடு போராடு போராடு தம்பி!
புயலாகு புலியாகு போராடு தம்பி!
யாரோடு போர்செய்கின்றாய், என்று பார்!
நம்மவராயின் ஆவேசம் ஆகாது தம்பி!

ஒன்றுபட்டு நாம் நிற்கும் வரைதோல்வி இல்லை!
உலகத்தான் எதிர்த்தாலும் நாம் வீழ்தல் இல்லை!
'சென்றார்கள், வென்றார்கள் தமிழர்கள்'' என்றே
செகம் சொல்லும்! அது கேட்க பார்க்காமை இல்லை!

கூறுபட்டு கூறுபட்டு சிதறிப் போகும்
கொடுமைக்குள் ளாகின்ற இனமாகி விட்டோமே!
நீறுபட்டுப் போகின்ற தமிழ்மண்ணைப் பாரீர்!
நிறுத்துங்கள், மோதாதீர்! நாம் வாழ வேண்டும்!

தனியாட்சி செயப்போகும் தமிழ்ச்சாதி இதுவா?
தமக்குள்ளே பகைகொண்டு முடிகின்ற விதியா?
குனியாத இனமின்று குனிகின்ற(து)! எங்கள்
குறிக்கோளை நினையுங்கள்! இணையுங்கள், எழுங்கள்!!

- சோ. ப

---

# ஒரு சுவாமிஜி வெதும்புகிறார்!

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா 'சஞ்சீவி' ஆசிரியருக்கு எழுதிய கடிதம் இது. அதனை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதற்காக இங்கு பிரசுரிக்கின்றோம்.

சைவ சமயத்துக்கு இப்படியாக ஆபத்து என்றும் வந்ததில்லை. அதிகாரம், அதர்மம் தலைதூக்கி தாண்டவமாடுகிறது. செல்வச் சந்நிதி கோயில் விவகாரம் அலங்கோலமாகப் போனதற்கு தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இரண்டு மந்திரிகளும் காரணம். சுவாமி விவேகானந்தர்— 'சமயம் வாய்ப்பேச்சு அல்ல, சமயம் அநுபூதியில் வந்தால் அதுதான் பூரணமானது' என்கிறார்.

இன்னும் 10 வருடங்களுக்குப் பிறகு கண்ணப்பர் சிவபெருமானுக்கு கண்ணைப் பிடுங்கிவைத்த நிகழ்ச்சி, சிறுத்தொண்டர் பிள்ளைக்கறி சமைத்தது எல்லாம் நம்ப முடியாத கதையாகிவிடும்.

காரணம் இன்றைய பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் இக்கதைகளைச் சொல்லிக் கொடுப்பதில்லை.

நாங்கள் சேவாச்சிரமத்தால் கடந்த ஒரு வருடமாக பஜனை ஒன்றை வல்லிபுர ஆழ்வார் சந்நிதியில் செய்துவருகின்றோம். பஜனைக்கு 2 பேர்கள் வந்தால் அதுவே பெரிய சாதனை. பலருக்கு பாடல்களை, நாமங்களை இருந்து படிக்க வெட்கமாக இருக்கிறது.

பன்னிரு ஆழ்வார்கள் எத்தனை கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தார்களோ? எவ்வளவு திருவருள் பொலிந்த பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

ஸ்ரீ சத்திய சாயிபாபா ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார்; 'பலர் கல்லில் கடவுளைக் காண்பதை விட்டு கோயிலில் உள்ள கடவுளை கல்லாகக் காண்பதால்தான் சமய வாழ்வு எம்மிடை மலரவில்லை' —என்று.

மாணிக்கவாசக சுவாமிகளின் வாழ்வு நமக்கு இத்தருணத்தில் ஒரு பெரிய வரப்பிரசாதம். மந்திரியாக இருந்தவர். தனக்கு குதிரை வாங்க கொடுத்த திரவியத்தை சிவனுக்கு வந்த குருவிடம் கொடுத்து ஆட்கொள்ளப்பட்டவர்.

குதிரையைப்பற்றியோ அரசனுக்கு என்ன பதில் சொல்வது என்பதைப் பற்றியோ அவர் இம்மியளவும் கவலைப்படவில்லை. சிவபெருமான் நரியைக் குதிரையாக்கி உலகெல்லாம் அதிசயிக்கும்படி செய்தார். குதிரைகள் நரிகளானதும் மாணிக்கவாசகருக்கு ஏற்பட்ட இன்னல்கள் அளவிடற்கரியது. கவலையோ பெருக்கெடுத்தது. சிவபெருமான் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண்சுமந்து, கோலால் அடிபெற்று நமக்கு இன்னருள் பாலித்தார்.

இன்று பல சிவஸ்தலங்களில் பிட்டுக்கு மண் சுமந்த திருவிழா நடைபெறுகிறது. சில கோயில்களில் இத்திருவிழா வெறும் சடங்காக இருக்கிறது.

கடவுள் பக்தனின் மன நிலையை அறிய பல சோதனைகள் புரிவது வழக்கம். சோதனைகள் எப்படி அமையும் என்று நாம் திட்டவட்டமாகக் கூறமுடியாது. தியாகம் என்பது வாய்ப்பேச்சில் இல்லை. தன்னை ஒறுத்து களியாட்டங்களை விட்டு, எளிமையான வாழ்வு நம் இனத்திடை என்று மலருகிறதோ அன்று தான் கடவுளின் பெரும் கருணை கிடைக்கும்.

தெய்வம் அற்புதமானது. தெய்வ அநுக்கிரகம் கிடைப்பது சுலபமான காரியமில்லை. பலர் பசித்திருக்க அறுசுவையுடன் உணவு சாப்பிடும் தமிழர்கள் பலர் இங்கு வாழுகிறார்கள்.

திருநெல்வேலியில் ஒரு சிறிய குடிசை குடிபுகும் நிகழ்ச்சிக்கு போகச் சந்தர்ப்பம் கிடைத்த பொழுது எனக்கு பெரும் கவலை ஏற்பட்டது. குடிசை சுமார் 500 ரூபா செலவில் கட்டப்பட்டிருக்கலாம். மலசலகூட வசதியோ, கிணறோ இல்லை.

பலர் மாடமாளிகை கட்டி டி.வி - வீடியோ, காற்றாடி போட்டு, அதனுடன் வாழ்வதைப் பார்க்க மிகவும் வேதனையாக இருக்கிறது.

சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்— 'எவன் ஏழைகளுக்காக இரங்குகின்றானோ அவனே தான் மகாத்மா என்பேன்' என்று. தயை கூர்ந்து இறைபக்தியையும் சேவை மனப்பான்மையையும் பெருக்குங்கள்.

---

# மங்கையர்க்குத் தனி அரசியாக விளங்கிய செங்கமலத் திருமடந்தை -- பாண்டிமாதேவி

வேதகால தொடக்கம் பெண்கள், சம அறிவும் ஈடுபாடும் உள்ளவர்களாக விளங்கினார்கள். உபநிடதங்களில் மைத்திரேயி போன்ற பெண்கள் சமதத்துவம் பற்றி உரையாடும் அளவிற்கு அறிவும் ஆற்றலும் நிறைந்தவர்களாக இருந்தார்கள். சங்கம் மருவிய காலத்தில் காரைக்காலம்மையார் பதிகம் பாடும் மரபைத் தோற்றுவித்து இறைவன் ஆடும்போது தான் பாடிக் கொண்டேயிருக்க வேண்டும் என்று வரம் பெற்றார். சைவ சமயம் ஏழாவது நூற்றாண்டில் நலிவுற்றபோது திலகவதியாரும், மங்கையர்க்கரசியாரும் சைவசமய வளர்ச்சிக்குத் தங்களையே அர்ப்பணித்தவர்கள். பெண் என்றால் பிறர் நலம் பேணும் ஒருவர் என்று பொருள்படும். பெண்களுக்குள்ள பல நற்பண்புகள் காரணமாக அவர்கள், தாய், சகோதரி, மனைவி, புதல்வி என்ற நிலையில் அரும்பணியாற்றி தம்மையே தியாகம் செய்துள்ளார்கள். தூண்டுதவ விளக்கனைய திலகவதியார் சகோதரி என்ற முறையிலும், மங்கையர்க்கரசியார் வாழ்க்கைத் துணைநலம் என்ற முறையிலும், ஆற்றிய பணிகள் பெண்குலத்திற்குப் பெருமை தருவனவாகும்.

பாண்டிமாதேவி சோழவம்சத்தைச் சேர்ந்தவர். காவிரி நதி பாய்வதால் வளம்பொருந்திய நாடாக அது விளங்கியது. சகல வளங்களும் ஒருங்கேயமைந்த நாட்டிலே மக்கள் வளமான வாழ்வு வாழ்ந்ததால் அவர்கள் உயர்ந்த இலட்சியங்களுடையவர்களாக இருந்தனர். சோழ மன்னர்கள் சிவநெறியன்றி மற்றைநெறியும் அறியாதவர்கள். அவர்கள் ஆலயங்களை அமைத்தும்,

### திருநின்ற சைவநெறிச் சிலங்காத்து தென்னர்குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை

கலைகளை வளர்த்தும் சமயத்தை வளர்த்த பெருமைக்குரியவர்கள்.

> சூழ்ந்து எழுந்த சமண மேலெழுச்சியை தமிழகத்திலிருந்து விரட்டியடித்த வீரத் திருமகள் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார்.
>
> தவக்கொழுந்தாக விளங்கிய ஞானசம்பந்தக் குழந்தை துணையுடன் அருள்நெறி வளர்த்த மணிமுடி அரசி அவர்.
>
> இன்று நினைவுகூரப்படும் அவரின் குருபூசைத் தினத்தை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது

எனவே சோழ வம்சத்தில் தோன்றிய மங்கையர்க்கரசியாருக்கு சமயப்பற்று இயற்கையாகவே இருந்தது. அவரை 'வளவர்கோன் பாவை' என்று சேக்கிழார் பெருமானும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் குறிப்பிட்டுள்ளமை சோழமன்னர்களின் சமயப்பற்று பரம்

**மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**

பரை பரம்பரையாக வளர்ந்து வந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. மாணியார் பாண்டி நாட்டு மன்னன் நின்றசீர் நெடுமாறனைத் திருமணம் செய்தார். பாண்டிய மன்னர்களும் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்துப் புகழ்பெற்றவர்கள். பாண்டிய மன்னன் தான் முன்செய்த தீவினை காரணமாக சமண சமயத்தை கடைப்பிடித்தான். அரசியாரையும் மந்திரி குலச்சிறையாரையும் தவிர ஏனையோர் எல்லோரும் சமணசமயம் சார்ந்து ஒழுகினார்கள். அங்கு பள்ளிகளும் பாழிகளும் பெருகின. ஆலயங்கள் பொலிவிழந்தன.

நாட்டு நிலையை எண்ணி மங்கையர்க்கரசியார் மனம் மிக வருந்தி திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய பெருமைகளை அறிந்து அவரைப் பாண்டி நாட்டிற்கு அழைத்தார். திருமறைக்காட்டிலிருந்து ஞானக்குழந்தை அடியார்கள் புடைசூழ மதுரை நோக்கி வரும் பொழுது முகில் சோலைகள் சூழ விளங்கும் ஆலவாய்க் கோபுரத்தைப் பார்த்து பாண்டிமாதேவியின் பணியைப் பாராட்டி 'மங்கையர்க்கரசி' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். மதுரை மாநகர் வந்தடைந்த புகலிவேந்தர் ஆலவாய்ப் பெருமானை வணங்கி இன்னிசைப் பதிகம்பாடி திருமுன் நின்று வந்தனைந்தார். அப்பொழுது அரசியார் நாயனார் திருவடிகளில் விழுந்து வணங்க,

'சூழுமாகிய பரசமயத்திடை தொண்டு வாழு நீர்மையீர் உமக்கு நாண வந்தனம்' என்று அவர் கூறியமை மாணியார் மாண்புக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.'

பாண்டிமாதேவியின் பணிகள் ஒரு பெண் என்ற முறையிலும், மனைவி என்ற முறையிலும், அரசி என்ற நிலையிலும் அமைந்துள்ளன. பெண் என்ற முறையில் அன்பு, அடக்கம், பொறுமை, சகிப்புத் தன்மை ஆகிய உயர் பண்புகளின் இருப்பிடமாக அவர் விளங்கி ஒரு நாட்டிடையே அவர் தம் வழிப்படுத்தியுள்ளார். உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடித்து உறுதியாக செயற்பட்டு மங்கையர்க்கு தனியரசியாக விளங்கினார். மனைவி என்ற நிலையில் கணவனைத் [illegible] பேண வேண்டிய கடப்பாடு அவருக்கிருந்தது. மன்னனுடைய உடல் நலம், உள நலம், ஆன்ம நலம் மூன்றையும் அவர் பேணினார். மன்னனுடைய வெப்பு நோயையும், கூனையும் போக்கி [illegible] செய்தார். உள்ளத்திலே சமணசமயச் சார்பு இருந்த காரணத்தால் அதனைப் போக்கி சைவநெறியின் மாண்பை உணரச் செய்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

### புலவர் ஐயா அவர்களின் பெருமை

பிள்ளை அவர்கள் காவிய பாடசாலையிற் படிக்கப் புகுந்த நாள் தொடக்கம் மதிப்போடும் பற்றோடும் புலவர் ஐயா என வழங்கி வந்த ஆசிரியர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களாவர். சுன்னாகம் நாகநாதபிள்ளை, சந்திரசேகரம்பிள்ளை, அம்பலவாணபிள்ளை என வந்த மரபில் வந்தவர்கள் முத்துக்குமார கவிராசசேகரம் என்பாரும் சின்னத்தம்பிப்பிள்ளை என்பாருமாவர்.

சின்னத்தம்பிப்பிள்ளை சமாட்சியம்மை என்பாரைத் திருமணஞ் செய்து பெற்ற பிள்ளைகள் இராமுப்பிள்ளை, அம்பலவாணபிள்ளை, சின்னம்மா, வள்ளியம்மை என்போராவர். இவர்களுள் அம்பலவாணபிள்ளை சிதம்பரம் அம்பலவாணர் எனப் புகழ்பெற்ற காமாட்சி என்பாரைத் திருமணஞ் செய்து பெற்ற மைந்தனே குமாரசுவாமிப் புலவர்.

குமாரசுவாமிப் புலவர் அவர்களின் பெரிய பாட்டனார் முத்துக்குமார கவிராசசேகரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலேயே பெரும்புகழ் பெற்றிருந்தவர். சொல்லலங்காரத்தோடு பல்வகைப் பாக்கள் யாத்தவர். வெள்ளைக்காரரின் அரசியற் போக்கை வெறுவாகக் கண்டித்துச் சுன்னாகத்து எழுந்தருளிய இறைவனிடம் விண்ணப்பித்தவர். புறமதத்தவர் செய்த சூழ்ச்சிகளை யெல்லாம் அம்பலப்படுத்தி நகைச்சுவையோடு நயமான பாடல் [illegible] நிந்த பெரும்புலவர். இம்மெனும் முன்னே கவி சொல் படிக் குவித்தவர். இலக்கணப்புலி எனப் பெயர் எடுத்தவர். குமாரசுவாமிப் புலவர் அவர்களின் வடமொழிப் புலமைக்கு வித்திட்டவர் நாகநாத பண்டிதர். நாகநாத பண்டிதர் வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் [illegible] யராயிருந்தார்.

புலவர் அவர்கள் நாவலர் வித்தியாசாலையில் சேவையாற்றிய காலத்தில் அவர் சுன்னாகத்திலிருந்து மயிலணியில் தம் மனையிலிருந்து நடந்து வந்தே பணி செய்தார். அவருக்கு ஆரம்பத்தில் கிடைத்த சம்பளம் பன்னிரண்டு ரூபா என்றும், இளைப்பாறிய காலத்தில்

### பிள்ளையின் பற்றுக்குரிய புலவர் ஐயா சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரே

வகைகள் செய்து பொதுமக்களைக் காத்தவர். அவர் இருபாலைச் சேனாதிராச முதலியாரின் இணைபிரியாத நண்பர். கூடிப் பிறவாத இரட்டையர்கள் என்று பிள்ளை அவர்கள் இவர்களைக் குறிப்பிடுதல் வழக்கம். முத்துக்குமார கவிராசசேகரம் அவர்களின் உத்தமமான மாணாக்கர் சி. வை. தாமோதரம்பிள்ளை. சேனாதிராச முதலியாரின் மாணாக்கர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்.

இத்தகைய புலமைப் புகழ் பெற்ற குடும்பத்தில் தோன்றிய குமாரசுவாமிப் புலவர் மல்லாகம் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்றதோடு, அக்காலத்துப் பெரும் புகழ் பெற்று விளங்கிய [illegible] பண்டிதர் தமிழ் நாட சாமர்த்தியத்தையும் குமாரசுவாமிப் புலவர் அவர்களுக்குக் காட்டிக் கொடுத்தவர்.

குமாரசுவாமிப்புலவர் அவர்களின் புலமையும் கல்விச் சேவையும் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் அறிமுகமானவை. தாமோதரம்பிள்ளை ஏழாலையில் 1876 இல் ஆரம்பித்த சைவப்பிர

**க. சி. குலரத்தினம்**

காச வித்தியாசாலைக்குத் தகுந்த தலைமையாசிரியர் குமாரசுவாமிப் புலவர் அவர்களே எனக் கண்டு அழைத்துச் சென்றார்.

புலவர் அவர்கள் ஏழாலையிற் சேவை செய்தபின், 1902 ஆம் ஆண்டு முதல் 1922 ஆம் [illegible] சாலையில் தலைமையாசி கிடைத்த சம்பளம் இருபத்தைந்து ரூபா என்றும் அறியும்போது அக்காலத்துப் பொருளாதாரத்தையும் நாம் ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம்.

தினமும் நடந்துவந்து நடந்துபோன புலவர் அவர்களுக்கு வழிநெடுகும் படிப்பாளிகள் வரவேற்பளித்தனர். பலர் கூட்டம் கூட்டமாகச் சிறிது தூரம் பின்தொடர்ந்து தமக்குத் தெரியாதனவற்றைக் கேட்டுத் தெளிந்தனர். இங்ஙனம் வகுப்பறை வெளியேறு வரன்முறையில்லாமலே பலர் படித்துப் பெரியவர்களாயினர். கொக்குவில் வாசியாய குமாரசாமி என வழங்கிய சபாரத்தின

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறும்பு

நிரை நிரையாய் சென்றிடுமாம்
நிலமெல்லாம் சுற்றிடுமாம்
தன்னம் ஒன்றும் இல்லாமல்
இன்பமாய்ப் பொழுதைக் கழித்திடுமாம்
இரவும் பகலும் பாராமல்
இனத் தவிராது சென்றிடுமாம்
பூமிக்கு கீழ வீடொன்றை
புற்ருய் அமைத்து வைத்திடுமாம்
சிற்றெறும் பென்று அதன் பெயராம்
சுறுசுறுப்பு அதனிடம் நாம் படிப்போம்.

எழுதியவர்:- செல்வி தேனுகா குகநாதன், வீமன்காமம் மகா வித்தியாலயம்

சிறுவர் சாடா

## அறிவீர்களா அதிசயங்கள்!

* காற்றும் தானே இயங்கும் ஓர் ஜெனரேட்டரை பேர்லின் விமான நிலையத்தில் பொருத்தியிருக்கிருர்கள். இந்த ஜெனரேட்டர் விமான நிலையத்துக்கு பயன்படுவதோடு, அண்மையில் உள்ள வானில நிலையத்துக்கும் பயன்படுகிறது. ஆல்பர்ட்சோயிட்சே என்பவர் கண்டுபிடித்துள்ள இவ் பெலுள்ள இத் தானியங்கி ஜெனரேட்டர் விரைவில் உலகெங்கும் பரவப்போகிறது.

* அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் சுமார் 20கோடி டயர்கள் குப்பையில் போடப்படுகின்றன சமீபத்தில் இந்தப் பழைய டயர்களிலிருந்து ஒரு விதஎண்ணெய் தயாரிக்க முடியுமென்று கண்டு பிடித்துள்ளனர். இந்த எண்ணெயைக் கொண்டு வாகனங்களை ஓட்டமுடியும். எதிர்காலத்தில் இந்த எண்ணெயைத் தயாரிப்பதால் பழைய டயர்களை என்ன செய்வது? என்ற கேள்வி எழாது.

* ரயில்-பஸ் என்ற ... புதிதாக ஒர் வாகனத்தை பிரிட்டிஷ் ரயில் இஞ்ஜினியரிங் நிறுவனம் உருவாக்கியுள்ளது பழங்கால டிராம் போல பார்வைக்குத் தோன்றினலும் மணிக்கு 110 மைல் தண்டவாளத்தில் ஓடக்கூடியது இந்த ரயில் — பஸ்ஸில் டாய்லெட் வசதிகளும் உள்ளன. பிரிட்டனில் விரைவில் அறிமுகமாக இருக்கும் பஸ் இதுதான்.

* நவீன விஞ்ஞான யுகத்தில் விமானங்களின் அமைப்பில் பெரும் மாறுதல் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது ராட்சத சூப்பர்சானிக் ஜெட் விமானங்களின் அமைப்புள்ளதாக இருக்கும் ரோஜர் ஷேப்பல் என்ற டக்லஸ் எயாரோஸ்போட் கொம்பனி இஞ்ஜினியரின் அறிக்கைப்படி இவ்வகை விமானம் தானுகப்புறப்பட்டு செய்யவேண்டிய பணியைச் செய்துவிட்டு தானுக விமான நிலையத்துக்கு வந்துவிடுமாம்.

—ம. பிரபாகரன், முரசுமோட்டை

## 'எண்ணங்களே' எம்மை உயர்த்தும் ஏணி

ஒரு மனிதசஞ்சாரம் இல்லாத காடு அங்கே காயையும், கனியையும், கிழங்குகளையும் உண்டு ஒரு மகான் தவம் செய்து கொண்டு வந்தார். அவர் எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் பழகி வந்தார் புலி சிங்கம்கூட அவரிடம் சிநேகமாகப் பழகி வந்தன.

இப்படி இருந்து வருகின்ற நாளிலே ஒருநாள் நாய் ஒன்று இழைக்க இழைக்க ஓடிவந்து அவரிடம் தஞ்சம்புகுந்தது. அதை ஒரு சிறுத்தை துரத்திவந்தது. இதைக் கண்ட மகான் பயந்து வந்த நாயைத் தனது தவ வலிமையால் ஒரு சிறுத்தையாக்கி விட்டார். சிறுத்தை திரும்பி போய் விட்டது.

சிறுத்தையாக உருமாறிய நாய் அந்த மகானிடம் அன்பாகப் பழகி வந்தது. மற்ருெருநாள் புலி ஒன்று இந்தச்சிறுத்தையைக் கலைத்தது. இவர் உடனே சிறுத்தையைப் புலியாகமாற்றிவிட்டார். சில நாட்கள் சென்றன யாளியைப்போலப் பயங்கர உருவமுள்ள மிருகம் ஒன்று புலியைத் தாக்கியது. இந்தமகான் முன்செய்தது போலப் புலியை அந்தப் பயங்கர மிருகமாக மாற்றிவிட்டார். அடிக்க வந்த மிருகம் ஓடிவிட்டது.

நாயாக இருந்து உருமாறிய பயங்கர மிருகம் நினைத்தது. இவ்வளவுவலமையும் ஒருங்கே அமையப்பெற்ற இந்தமகான் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டி காட்டில் உள்ளவையெல்லாம் பயங்கர மிருகங்களாக மாற்றி விட்டால் ஏதோ ஒன்று என்னைக்கொல்ல நேரலாம். அதற்குமுன் இந்த மகானையே முடித்து விட்டால்...

நாயாக இருந்த பயங்கர உருவத்தின் மனப்போக்கை அந்த மகான் தனது தவவலிமையால் உணரப்பெற்று அந்த-

-இதன்-

கிணுடியே தனது கமண்டலத்து நீரைக் கையிலெடுத்து 'நீ நாயாகக் கடவாய்' என்று அந்த மிருகத்தின் மேல் தெளித்தார். மறு கணம் அது வாலை ஆட்டிக்கொண்டு நாயாக நின்றது.

எண்ணங்கள்தான் ஒருவனை உயர்த்துகின்றன. அவைதான் அவனை வீழ்த்தவும் செய்கின்றன என்பதை நாம் எல்லாம் உணர்ந்து நல்ல எண்ணங்களுடன் வாழவேண்டும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்பது முதுமொழி. ஆகவே சிறுபிள்ளைகளாக வளர்ந்து வருகின்ற போதே நாம் நல்ல எண்ணங்களையே எண்ணவேண்டும் நல்லதைச் செய்து நல்லவர்களாக வாழவேண்டும்.

## விஞ்ஞானத்தின் 'டிக் டிக்' விந்தை

நாம் உயிருடன் இருக்கின்ருேமா என அறிய இதயம் 'டிக் டிக்' என ஒலிக்கிறது. நேரத்தை அறிய கடிகாரம் டிக் டிக் என்று ஒலிஎழுப்புகிறது. ஆம், கடிகாரம் டிக் டிக் என்று ஒலிக்கிறது. கடிகாரங்கள் பல வகைப்படும். இவற்றுள் 'டிக் டிக்' கடிகாரம் முதன்முதல் சுவிற்ஸர்லாந்திலேயே தயாரிக்கப்பட்டது அங்கு பனி கடுமையாதலால் வீட்டிலிருந்து செய்யக்கூடிய கைத்தொழிலாக கடிகாரத் தொழில் கணிக்கப்படுகிறது. உலகில் பலவகையான டிக் டிக் கடிகாரங்கள் உள 'குக்கூ' என்று குருவி கூவும் கடிகாரமும் சுவிற்ஸர்லாந்திலேயே செய்யப்பட்டது இப்போது நவீன இலத்திரன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வருவாய்க்கு ஏற்ற செலவு செய்பவளே நல்ல துணைவி

பெண்ணுக்கு மாதர் என்றும் பெயர் உண்டு. மாதர் என்ருல் காதல் எனக் கூறலாம். காண்பவரால் விரும்பப்படும் பொருள் அழகுடையதாயிருத்தல் வேண்டுமாதலால் மாதர் என்பதற்கு அழகு என வேறு ஒரு பொருளும் கூறி பெண்களை அழகுப்பொருளாக கருதத் தொடங்கினர்.

கடவுள் தன்மையை உணர்ந்து கடவுளை அழகு என்பர். அழகு இல்லாத இடம் கடவுள் இல்லாத இடமாகும். எனவேதான் இல்லாள் இல்லாத வீடு வீடாகாது.

தாய்மைக்கோர் இருப்பிடமாய், தெய்வங்கள் உறையும் கோயிலாய், கோடையில் இளைப்பாற்றிக் கொள்ளுதற்கோர் குளிர் தருவாய், வழி தப்பிய மாலுமியைக் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கமாய் விளங்குவது இல்லம்.

மாண்புடைய மங்கை யொருத்தி இருக்குமிடம் கூரையும் சுவரும் இன்றி வெட்ட வெளியே ஆயினும் அது சிறந்ததோர் இல்லமாகும் அவள் தங்குமிடம் பலவித வண்ணம் தான் தீட்டிய மாளிகையிலும் சிறப்புடையது அவளுறையும் இடத்தில் இல்லாதது ஒன்றில்லை

ஆடவர் (கணவன்) தொழில் மனையின் புறத்தேசென்று பொருள் தேடிக் கொண்டு வருவதும் அகத்தே இருந்து ஆவன செய்து இணை புரிந்தொழுகும் மகளிர்க்கு அப்பொருளைச் செலவிடும் உரிமை வழங்கப்பட்டிருந்தமையால் மனைவி இல் என்றும் இல்லாள் என்றும் சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டாள்.

கணவனதுவருவாய்க்கு ஏற்ற செலவு செய்பவளே வாழ்க்கைக்கு ஏற்ற துணைவியாகின்ருள் ஆடவன் எத்தனை சம்பாதித்தாலும் வீட்டுக்காரி அளவு இல்லாவிட்டால் அத்தனையும் வீண்தான். வீடு என்னும் அரசுக்கு தலைவியாக இருப்பதால் தான் மனைவி என்ற பெயர் பெண்ணுக்கு வந்தது

"ஏர் பிடித்தவன் என்ன செய்வான்?" பானைபிடித்தவள் பாக்கியம்!" என்னும் ஒரு பழமொழி உண்டு ஏர் பிடித்து உழுது வீட்டுக்குக் கொணர்ந்து போடுபவன் அந்தளவிலே நிற்பான். அப்படிக்கொண்டு வந்ததை வைத்துக் கொண்டு செய்யவேண்டியதை அளவறிந்து செய்து வாரார் புகழக் குடும்பத்தை நடத்தும் பொறுப்புடையவள் மனைவி

தன் கணவனுக்கு உணவருந்தியும் விருந்தினரைப் போற்றி உபசரித்தும் மனையின் வளத்துக்கு ஏற்ப வாழ்ந்தும் இல்லறத்தின் இன்பத்தை உண்டாக்குபவள் இல்லாள்.

மணமான மகளிர்க்கு பதிவிரதமே சிறந்த அறம் தன் கணவனையன்றி பிறர் தம்மைத் தொடினும் தம்பாற் படினும், தம்மை விரும்பினும் மனைவியானவள், அவர்களை மனத்தால் விரும்பாமையே பதிவிரதத்தின் பண்பு

கல்விக் கேள்விகளால் ஏற்படும் திண்ணிய அறி

### இ. சுலோசனு

வொழுக்கம் கற்பு ஆகும். எனவேதான் வள்ளுவரும் 'பெண்ணிற் பெருந்தக்காஉள கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்' என்று கூறியுள்ளார்.

கணவன் பொருள் செய்யுமாறு பிரிந்து செல்லவேண்டி நேரிடின் காதல்மிழி நிற்கும் பிரிவுத்துன்பம் தோன்றி மனைவியை வருத்துவது இயற்கை. காதலுக்கும் கடமைக்குமிடையில் நிகழும் போரில் கடமை வீழ்ச்சியுறின் அது காதல் வாழ்க்கையில் வெறுப்பை விளைவித்து துன்பம் பயக்கும் என்பதை இருவரும் உணர்தல் வேண்டும். கணவன் பிரிந்து செல்லும்போது வற்புறுத்தும் சொற்களையே பற்றுக்கோடாகக் கொண்டு மனையிலே கடமைகளைச் செய்வதே மகளிர்க்கு சிறந்த கற்பாகும்.

மகளிர் எப்போதும் கணவனுடைய மனநிறைவையே குறிக்கோளாகக் கொண்டு ஒழுகுவர். தாம் செய்யும் ஒவ்வொரு செயலும் கணவர்க்கு உவகைதருமா என்பதை ஆய்ந்தறிந்து கேட்டு அறிந்து கொள்வர். அதனுல் கணவனது காதலன்பு பிறமகளிர்பால் செல்லாது காத்தொழுகுவதை அவர்கள் கண்ணும் கருத்துமாய் கொண்டுள்ளனர்.

நங்கை

### எலுமிச்சம் பழத்தின் மகிமை

தொகுப்பு: புங்குடுதீவு சிவமலர் செல்லத்துரை

* முகத்தில் கருமம், கரும்புள்ளிகள் என்பன ஏற்பட்டால் பாதாம் பருப்பை எடுத்து தோல் நீக்கியபின் நன்ருக அரைத்து முட்டை வெண்கருவையும் சில துளி எலுமிச்சம் பழச் சாற்றையும் சேர்த்து முகத்தில் தடவி ஊறிய பின்னர் குளிர்ந்த நீரினுல் முகத்தைக் கழுவ வேண்டும். கரும்புள்ளிகள் மறைவதுடன் சுருக்கங்களும் நீங்கும்

* பொடுகு தலையில் இருந்தால் சிலருக்கு அரிப்பு ஏற்படும். அவர்கள் முட்டை வெண்கருவுடன் எலுமிச்சம்பழச் சாற்றையும் சேர்த்து தேய்த்துக் குளித்து வந்தால் நாளடைவில் பொடுகு மறைந்துவிடும்.

* காலையில் இளஞ்சூடான வெந்நீரில் ஒர் எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து 1 தேக்கரண்டி தேன் கலந்து பருகினுல் முகம் வசீகரமாகும். சருமமும் மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

* வெற்றிலை, புகையிலை போடுவதனுலோ அல்லது வேறுவிதமாகவோ பற்களில் கறை படிந்திருந்தால் இளஞ்சூடான வெந்நீரில் சிறிது எலுமிச்சம் பழச் சாறு கலந்து வாயைக் கொப்பளித்தால் கறைகள் மறைந்து விடும்.

★ கிசுகிசுவுக்கு முற்றுப்புள்ளி

# பாண்டியராஜன் - வாசுகி திருமணம்; எம். ஜி. ஆரிடம் மணமக்கள் ஆசி!

நடிகரும் டைரக்டருமான பாண்டியராஜனுக்கும், சினிமாப்படத் தயாரிப்பாளர் அவிஞசி மணியின் மகள் வாசுகிக்கும் திருமணம் நடந்தேறியது

பாண்டியராஜன்-சீதா (ஆண்பாவம் புகழ்) கிசுகிசுவுக்கும் இந்தத் திருமணத்தோடு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது.

சென்னை தியாகராய நகரில் உள்ள இந்தி பிரச்சார சபா அரங்கில் திருமணம் நடந்தது. பாக்கியராஜ் மனைவி பூர்ணிமாவுடன் வந்திருந்து திருமணத்தை நடத்தி வைத்தார் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

நியூ உட்லண்ட்ஸ் ஒட்டலில் நடந்த வரவேற்பு விழாவில் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும் கலந்து கொண்டார். மணமக்கள் அவரிடம் ஆசி பெற்றனர்.

இந்தத் திடீர் திருமணம் குறித்து பாண்டியராஜன் சொல்கிருர்:

'மனைவி ரெடி' படத்திற்காகப் பதிவு செய்யப்பட்ட பாடலை தயாரிப்பாளர் அவிஞசி மணி அவர்களுக்குப் போட்டுக் காட்ட வீட்டுக்குச் சென்றேன். அங்கு அவர் குடும்ப நண்பர்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அப்போதுதான் வாசுகியைச் சந்தித்தேன். அவரின் குடும்பப் பாங்கான தோற்றம் என்னைக் கவர்ந்தது.

என் அம்மா அவை முறைப்படி அனுப்பிப் பெண் கேட்கச் சொன்னேன் அவர்களும் சம்மதம் தெரிவிக்கவே, திருமணம் நிச்சயமானது. இது பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்' என்ருர்.

## குளத்தில் மூழ்கியவரை காப்பாற்றினர் சரிதா

'எல்லைக்கோடு' படத்தின் படப்பிடிப்பு குளத்தில் நடந்து கொண்டிருந்தது. சரிதாவின் பாதுகாப்பிற்காக இன்னும் பத்துப் பெண்கள் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள்.



திடீரென்று ஒரு பெண் 'ஆ' வென்று அலறியபடி தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருந்தார் உடனே இதைக் கவனித்து விட்ட சரிதா, நடிப்பதை நிறுத்திவிட்டு தண்ணீரில் பாய்ந்து நீச்சலடித்து அந்தப் பெண்ணைக் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

படப்பிடிப்பை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும் சரிதாவைப் பாராட்டினர்களாம்.

தண்ணீரில் மூழ்கி சரிதாவால் காப்பாற்றப்பட்ட அந்தப் பெண் வேறு யாருமல்ல. சரிதாவுக்குப் பாதுகாப்பிற்கு வந்த பத்துப் பெண்களில் ஒருவர் தான் அவர்.

## 'விக்ரம்' படச் செலவு குறித்து கமலஹாசன் கூறும் காரணம்

தமிழில் 'உலகம் சுற்றும் வாலிபன்' படத்திற்குப் பின் அதிக செலவில் எடுக்கப்படுகின்ற படம் 'விக்ரம்'.

இந்தப் படத்திற்காக பணத்தை வாரி இறைத்துச் செலவு செய்து கொண்டிருக்கிருர் கமலஹாசன்.



அளவின்றிச் செய்கின்ற செலவுகளைக் கவனித்த அவரது நண்பர் ஒருவர், 'என்ன கமல், இவ்வளவு செலவு செய்கிருயே லாபம் வருமா?' என்று கேட்டிருக்கிருர்.

அதற்குக் கமல், 'எனக்கு 'விக்ரம்' படத்தினுல் ஒரு ரூபாய் லாபம் கிடைத்தாலும் போதும். அப்படி லாபம் கிடைக்காவிட்டாலும், இந்தப் படத்தின் 'நெகடிவ்' நிச்சயமாக எந்தக் காலத்திலும் விலைபோகும்.

என்னையும், ரஜனியையும் வைத்துப் படம் எடுப்பவர்கள், ஒரே படத்தில் நாற்பது, ஐம்பது லட்ச ரூபாயைச் சம்பாதிக்க நினைக்கிருர்கள்.

ஆனல், அதே நேரம் பணத்தைச் செலவிடுவதற்கு அவர்களுக்கு மனம் வருவதில்லை அவர்கள் திருந்த வேண்டும் என்பதற்காகவே, இத்தனைவு இந்தப் படத்திற்குச் செலவு செய்கிறேன்' என்று கூறியிருக்கிருர்.

## பிரேம் நசீரின் சாதனை

மலையாள நடிகர் பிரேம் நசீர் 700 படங்களுக்கு மேல் கதாநாயகனுக நடித்துவிட்டார். இது ஒரு உலக சாதனை ஆகும்.

இவர் நடிக்கத்தொடங்கியது 1952 ஆம் ஆண்டில் நடித்த முதல் படம் மருமகள்.

## மோகன் திருமணம்?

நடிகர் மோகன் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து இருக்கிருர். அவர் தேர்ந்து எடுத்து இருக்கும் மணப்பெண், இசையமைப்பாளர் திவாகரின் மகள்.

நல்ல அழகியான இவரையே மணந்தால் மணப்பேன் என்று இடமனத்துடன் இருக்கிராம் மோகன்.

இப்பொழுது முறைப்படி பெண் கேட்பதற்கு முன் நடத்தும் ஆராயும் போகும் படலம் நடந்து கொண்டிருக்கிறது. மணமகள் வீட்டார் மணமகனைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள்.

## ஸ்ரீதேவியின் படம்

ஸ்ரீதேவி சொந்தப் படம் ஒன்றைத் தயாரிக்கிருர். தெலுங்கில் தயாராகும் இப்படத்தில் சிரஞ்சீவி நடிக்கிருர்.

## தெலுங்கில் சுலக்ஷணு

தெலுங்குப் படவுலகில் வேட்டவிட்டாகப் புகுந்திருப்பவர் சுலக்ஷணு. தற்போது இவரின் கையில் மூன்று படங்கள் இருக்கின்றன.

இவை வெளியானவுடன் இவர் தெலுங்குப் படவுலகில் நிலையான ஓர் இடத்தைப் பிடித்துவிடுவார் என்று சினிமா வட்டாரங்கள் கருதுகின்றன.

## திரை உலகில்

சொந்தப்படம் தயாரிக்கும் நடிகர் பட்டியலில் மிக விரைவில் இடம் பெறப்போகிருர் விஜயகாந்த் அவரின் படத்தை இயக்க காத்துக்கொண்டு இருக்கிருர் எஸ். ஏ. சந்திரசேகரன்.

*

நடிகை விஜயகுமாரி இதுவரை கொடைக்கானலுக்குப் போகவில்லையாம். என்ன அதிசயம்!

*

நடிகை வடிவுக்கரசியும் அவரது கணவர் பதமனுபனும் மந்திராலயா மூவிஸ் சார்பில் தயாரிக்கும் படம் 'அன்னை என் தெய்வம்'. இது இம்மாதம் திரையிடப்படவிருக்கிறது.

*

1985ஆம் ஆண்டின் அகில இந்திய சிறந்த நடிகையாக சுஹாசினியும் சிறந்த நடிகராக சசிகபூரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

*

ஏ. வி. எம் நிறுவனம் தயாரிக்க உள்ள படம் ஒன்றை டைரக்ட் செய்கிருர் விசு. இதில் கதாநாயகியாக மாதுரி நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.

## ரேவதி நடிப்பதை நிறுத்தப் போகிருராம்



திருமணத்தக்குப் பின், நான் சினிமாவில் நடிக்கப் போவது இல்லை இது நானுக எடுத்த முடிவு என்று கூறுகிருர் நடிகை ரேவதி.

ரேவதி இதுபற்றிக் கூறுகையில்,

'ஒரு பெண், திருமணத்துக்குப் பிறகு, மற்ற ஆண்களைக் கட்டிப் பிடித்து ஆடுவதை, எந்தக் கணவனும் பொறுத்துக்கொள்ள மாட்டான்.

அதனுல் நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு, கணவனுக்கு உகந்த மனைவியாக இருக்கப் போகிறேன்.

சினிமாவில் நடிக்காவிட்டாலும், எனது கலைப்பயணம் தொடரும். தொடர்ந்து நடன நிகழ்ச்சிகள் நடத்துவேன் முடிந்தால், ஒரு நடனப் பள்ளி நடத்தவும் திட்டமிட்டு இருக்கிறேன்' என்ருர்.

## ★ நட்சத்திர முகவரி ★

கமலஹாசன்
சுஹாசினி
172, எல்டாம்ஸ் ரோடு,
சென்னை - 18.

சத்யராஜ்
6, வேலஸ் கார்டன்,
நுங்கம்பாக்கம்
சென்னை - 6

எம். ஆர் ராதாரவி
23, போயஸ் சாலை,
சென்னை - 18.

செந்தில்
எண். 11 காமராஜ் சாலை,
தேனும்பேட்டை,
சென்னை - 18.

அனுராதா
14, ஆர் கே சண்முகம் சாலை,
கே. கே. நகர்,
சென்னை - 78.

அகல்யா
3 ஆவது குறுக்குத் தெரு,
லேக் ஏரியா,
சென்னை - 34.

குயிலி
37, நான்காவது பிரதான சாலை,
சி. ஐ. டி. நகர்,
சென்னை - 35.

பேபி ஷாலினி
344, ஆற்காடு ரோடு,
சென்னை - 25.

ஸ்ரீவித்யா
21, லேடி மாதவன் நாயர் ரோடு மகாலிங்கபுரம்,
சென்னை - 34,

கமலா காமேஷ்
7, தேவடி தெரு,
சென்னை - 4.

## பஸ் கண்டக்டர் வருகிருர்!

பிலஹரி தயாரிக்கும் 'பஸ் கண்டக்டர்' படத்தின் கதாநாயகன் கவுண்டமணி. கதாநாயகி இளவரசி.

இப்படத்துக்காக இளவரசி சாப்பாட்டுக் கடையைச் சுமந்து செல்லும் காட்சி அண்மையில் படமாக்கப்பட்டது. படத்தை டைரக்ட் செய்கிருர் விஜயசிங்கம்.

மிக விரைவில் 'பஸ் கண்டக்டர்' திரைக்கு வரவிருக்கிறது.

● தயாரிப்பு: பேரின்பம் ●

வெள்ளித் திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(இருமாதக்குறுநாவல்)

குறைந்த கலி; நிறைந்த வேலை.

இந்த இவர்களின் வதிவிடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்ட அந்த மனிதர்கள் — ஆண்கள், நாளொரு மேனியாக இவர்களின் வசிப்பிடங்களைச் சுத்தம் செய்கின்ற கூலிகளாக — மல ஜல கூடங்களைச் சுத்தகரிக்கும் இயந்திரங்களாக — 'தோட்டி'களாக்கப்பட்டு விட்டார்கள்.

இந்த விசித்திரம் கூடச் சரியாக எவருக்கும் தெரியாது.

அந்த மனிதர்கள் இவர்களின் ஜனநாயகத்தில் நிரந்தர கூலிகளாக அடிமைகளாக்கப்பட்ட பின் தான் ஓடி முழிசினார்கள்.

ஆனால், இறுகப் பூட்டிய சங்கிலி அவர்கள் கரங்களில் செப்பமாக மாட்டப்பட்டுவிட்டன. அசைத்தால் கரங்களே துண்டிக்கப்படும்.

அவர்களைப் பொறுத்த வரை வீடு வாசல், புருஷன் பெண்சாதி, பிள்ளை குட்டி, ஓய்வு ஒழிச்சல் யாவும் அந்த அடைப்புக்குள் தாம்.

எச்சில் உணவு; பிச்சைக் கூலி.

'சுதந்திரப் பிறவி'களான இந்த ஜனநாயகப் பிச்சைக் கூலிகளுள் அந்த அவர்கள் ஓய்வு நேரங்களில் தனியாகக் 'குசுகுசு'த்து எதையோ எல்லாம் பேசிக் கொள்வார்கள்.

பேரம் பேசுகிறவன் பாணியிலும் சம்பாஷிப்பார்கள். பிரதேசங்களில் இரவின் இருள் கவ்வியதும் அவர்கள் வீதிகளில் இறங்கி விடுகிறார்கள் — ஏகாந்தமாய்ச் சுற்றித் திரிகின்றார்கள்.

அவர்கள் அணிந்த கன்வஸ் சப்பாத்துக்கள் அந்த இரவு வேளைகளில் ஓசைப்படாமல் 'சக் சக்' என்று மெதுவாகக் கேட்கும்.

நாளாக இந்த ஒலிகள் அன்றாடம் கேட்கின்ற 'நித்திய ஓசை'களாகி விட்டன.

இந்த எடுபிடிகள் மத்தியில் சகல விவகாரங்களுக்கும் மாறுபட்ட - முரண்பட்ட விநோதமான ஒருவன் - இவன் பக்தி பேதலித்தவனாயிருக்க வேண்டும் - அந்த ஒருவன் தன் சக நண்பர்களுக்கு 'நாசகாரி'யாகத் தோன்றினான்.

இந்த இவனுக்கு அவர்களின் காச்சல் சிலவேளை லயம் பிசகி அவலமாக இடறி விழுகின்ற கோலங்களை இவன் கவனித்துக் கொள்வான்.

இன்றும் அவர்களின் நடமாட்டம் இந்த இவனுக்குப் பிடிபடுவதாக இல்லை.

லயம் பிசகித்தான் காதில் கேட்கின்றன.

இந்த இவன் 'சடார்' என்று படுக்கை விட்டு உன்னி எழுந்தான்.

விழித்த கண்ணில் அறை கும்மிருட்டில் அம்மியிருக்கின்றது.

கண்களைத் துடைத்துக் கொண்டு மெல்ல எழுந்தான். வீதியின் நடுச் சந்திக்கம்ப மின் வெளிச்சத்தில் ஈக்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன.

வதிவிடத்தில் இன்னும் இவனையொத்த சிலரையும் தவிர எந்த எவனையும் காணவில்லை.

நெஞ்சு 'டக் டக்' கென்று இடித்துக் கொள்கிறது. ஓசைப்படாமல் மெதுவாக நகர்ந்து 'சுவிற்சை'த் தட்டி விட்டான்.

மின்னலாய் அடித்துப் பரவியது பிரகாசம். சரியாக முக்கால்வாசிப் படுக்கைகள் காலியாகக் கிடக்கின்றன.

கனவுகளும் நினைவுகளும் கண்ட, கேட்ட, கற்பித்த உருவகத்தின் மறு வார்ப்புகள் என்று அவன் அறிவான். ஆனால், கனவுகள் நினைவுகளைப் போலவே காட்சிகளாகவும் அமைந்து விடுகின்றன என்பதை அவன் இன்று தான் கண்டான்.

'சீ, தூ... தேச விசுவாசமற்ற பெண் வேட்டைக் காமுகர்கள்... இவர்கள் மேனிகளே வெள்ளை... இதயங்களோ கண்டங்கள்... கழிசடைப் பாஷாணங்கள்...!'

'லைற்'றை 'ஒவ்' பண்ணிவிட்டு மீண்டும் கம்பளியால் இறுகப் போர்த்துக் கொண்டு படுத்துக் கொண்டான்.

உறக்கம் வர மறுத்தது. அவன் மனசு அடித்துக் கொண்டது.

தனது சகாக்கள் சகவாசம் ஆபத்தானதால், தன்னை ஓர் 'களவாளி' என்று நினைத்துக் கொள்வார்கள் என்றும் ஒரு கணம் யோசித்தான்.

கழுத்தில் மாட்டியிருந்த பதக்கத்தைத் திறந்தான். திறக்கவே மின்னித் துலங்கும் ஒளியில் அழகாகத் தெரிகிறது, அந்தப் படம்.

செங்கொடிக்கு அஞ்சலி செலுத்துகிற ஓர் தலைவன் 'ஓ சகோதரனே, சகல அடிமைத்தனத்திலிருந்தும் விடுதலையடையப் போராடுவாயாக'

'விடுதலை...'

அவன் இதயம் பூரித்துப் பொங்கியது.

அடக்குகிறவனிலிருந்து விடுதலை.

ஒடுக்குகிறவனிடமிருந்து...

சுரண்டுகிறவனிடமிருந்து...

கொடுமைக்காரனிடமிருந்து...

ஆதிக்கக்காரனிடமிருந்து...

இனவாத வெறியனிடமிருந்து...

குலவாத ஆணவனிடமிருந்து...

ஜாதிவாதத் திமிரனிடமிருந்து...

மதவாதத் திடும்பனிடமிருந்து...

விடுதலை-விடுதலை-விடுதலை...

'ஓ சகோதரனே, இதோ ப[illegible]... விஸ்வாசத்துடன் ஏற்பாயாகில் இந்தத் தேசம் உன் தாயாவாள். நீ இந்த மாதாவின் மைந்தனாவாய்'

மனனமாகிய வாக்கியங்களை அவன் மீட்கின்றான். அந்தப் படத்தை - அந்தத் தலைவனை முத்தமிட்டுப் பதக்கத்தை மூடிக் கொண்டான்.

விடிகாலையாகிறது.

சகபாடிகள் வந்து சேர்ந்ததாகக் காணோம்.

இவன் மனசில் ஒரு அந்தரிப்பு.

'இவர்களின் இந்தப் 'பெண்பிடி நாடகம்' எத்தனை நாட்களாக நடந்து கொண்டிருக்கிறது?'

இவன் தனிமையான பிறகும் பழைய பிடிவாதங்கள், புதிய இலட்சியங்கள், நிதானப்போக்குகள் இவன் நெஞ்சில் வஜ்ஜிரம் போல் அழுத்திக் கிடக்கின்றன. ஆனால், நரம்புகளைப் புடைக்க வைக்கும் இந்தக் குளிர்ப் பிரதேசமும், பனிக் கூதலும் இடைக்கிடை இவன் ரசித்துக்கொண்ட இலட்சியங்களைக் 'கடுஞ்சோதனை'க்குள்ளாக்கினதுண்டு. என்றாலும், நீண்ட காலத்தை உபத்திரவங்களுக்கும் முகங் கொடுத்து, வலிய மிடுக்குடன் அந்தகாரப் பேதலிப்புகளைச் சாடி நின்று வெற்றிவாகை சூடியிருக்கிறான்.

அவன் தன்னை ஒரு தாய்மைவாதியாக - ஒழுக்கவாதியாக - மனுக்குல மேம்பாட்டிற்காக அர்ப்பணித்துவிட்ட இலட்சியவாதியாக்கிக் கொண்டவன்.

வானவில்லின் வர்ண ஜாலங்களில் மயங்கி, அதுவே வானமாக நினைத்து அவன் வரித்த இலட்சிய வேட்கையின் பால் போதம் பெற்ற தத்துவங்களை வெறும் சுலோகங்களாக அர்த்தப்படுத்திக் கொண்டவனல்லன். வாழ்க்கையின் அடித்தள நுணுக்கங்களையும், அதன் அன்றன்றுடான காலங்களின் அதல பாதாள பேறுபள்ளத்தையும் நீவி நீவி, துருவித் துருவி ஆராய்ந்த ஒரு சரித்திர விஞ்ஞானப் பிரகிருதி என்றுகூட இவனைச் சொல்லலாம்.

அப்படித்தான் செயற்பட்டும் வருகிறான். அந்தச் செயலிலும் இவர்களுடன் இணைந்த சிப்பாயானது, இவர்கள் யார் எவர் என்பதைக் கண்டு தெரியவே அன்றி, இவன் தனக்கு வாசியாக எதையும் அபகரிப்பதற்காகவல்ல என்பதில் திடசித்தமானவன்.

எதிலும் தன்னை மாத்திரம் பிரத்தியட்சப்படுத்தாமல் அடுத்தவன் பற்றிச் சிந்தித்து வாழ்ந்து நடப்பவனின் பாதங்கள் எப்படியெல்லாம் சேறு, சகதி, மேடு, பள்ளம் — கல்லடி, சொல்லடி, பொல்லடி படுமோ அத்தனை வாதைகளும் பட்டுத் தேய்ந்து தேர்ந்து விட்ட ஓர் அனுபவசாலி என்றே இவனைச் சொல்ல வேண்டும் - இலக்கியவாதி போல.

இத்தனைக்கும் இந்த இவனை இளம் வாலிபப் பருவம் தாண்டிய தவ ஞானத் தாடிவாலாக்களின் வரிசையிலோ, கவிழ்த்துவிட்ட காவிகளின் மிடுக்கான துடிப்புள்ள வர்க்கத்திலோ சேர்த்தியாக்கவும் முடியாது.

இவன் திடகாத்திரமான ஓர் வாலிபன். வாலிபத்திலே பலவித தேர்ச்சி பெற்று முதிர்ந்த உள்ளமுடைத்தான ஒரு ஜீவி.

தன் சுய விருப்பு வெறுப்பு, ஆத்திரம், பகை, பழி — ஆகியவற்றைத் தீர்த்துக்கொள்ளு முகமாக, சொந்தமாகப் பரந்து கிடக்கும் பிரதேசங்களைத் துண்டுகளாக்கி — அதன் மேனியெல்லாம் தனியாதிக்கம் புரிந்து கொண்டு, தானே மூலதனக்காரனாகவும், தான் பிறந்த சொந்த மண்ணின் மைந்தர்களை அநாதைகளாக்கிவிட்ட சாணக்கியத்தை - அதன் கோர விருத்தத்தை எதிர்த்து, சின்னஞ்சிறு பராயத்திலேயே இவன் பதைப்பட்ட போராட்டங்களில் குதித்து - அப்போராட்டத்தின் கண் மக்கள் விழிப்படைய -

## (அத்தியாயம் - 02)

எழுச்சிகொள்ள - கிளர்ச்சி கொள்ளச் செய்திருக்கிறான்.

எங்கெல்லாமோ இடந்து வந்த அந்த வெள்ளைத்தோல் பணநாயகர்களை உலுப்பிய இந்த இவனின் போராட்டச் சுவடுகள் இன்றும் இவன் நெஞ்சில் அழியாச் சித்திரங்களாகக் கிடக்கின்றன. உறுதி வாய்ந்த இந்த நெஞ்சு, அதே அந்நியர்கள் ஜனநாயகப் போர்வையில் ஆக்கிரமித்த பிரதேசங்களில் அடங்கி ஒடுங்கிக் கிடப்பதை நினைக்க அவன் மனம் புழுங்கிற்று.

பெண்களுள் தாய்மையையும் ஆண்களுள் திடகாத்திரத்தையும், மனிதர்களுள் சகோதரத்துவத்தையும் அவன் பார்வை பார்க்கப் பாவி, அந்த இலட்சியங்களுக்காகவே தன்னை முற்றாக அர்ப்பணித்துவிட்ட அவனுக்கு, இனைற்றுத்தவனை போக்கட்டுண்டு அடைபட்டுக் கிடக்கும் இந்த அதிகார சேவகம், தனது உலகளாவிய இலட்சியப்பற்றுக்கு இட்ட விலங்காகவே அவனுக்குப்பட்டது.

இவற்றையெல்லாம் நினைத்துச் சஞ்சலப்படுவதை விட அவனால் இப்போது எதையுமே செய்ய முடியவில்லை.

இந்த இவர்களாகவும் கவியும் யுத்தமேகங்களை இவனால் தடுக்க முடியுமா?

அவன் இந்தச் சேவைக்கு விண்ணப்பித்த போதே அவன் தோழன் ஒருவன் கூறியிருந்த வாக்கியங்கள் எத்தனை சத்திய வெளிப்பாடானவை.

'தோழனே, நீ மாறுவேஷம் போடலாம். ஆனால், உனது உள்ளம் உடைப்பெடுத்த பெருவெள்ளம். அது சமுத்திரத்தில் சங்கமித்தது போல் பழகப்பட்டது மனுக்குலத்தோடு ஒன்றிய உலக நோக்கில் உன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்ட நீ, இந்த ஆதிபத்தியவான்களுடன் சென்றால் ஜனவாடையே தெரியாமல் மனந்திணறித்துடிப்பாய். அந்தப் பிரதேசம் நம் நாட்டுத் தேசியப் புனருத்தாரண எழுச்சியால் அமைந்ததன்று; அது வெள்ளை ஜட்ப் பணநாயகர்களின் சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்த ஏவப்பட்ட கூலிகளால் அமைத்த சிறைக் கோட்டம்'

தோழனின் ஞான போதம் இவனுக்கும் உண்டு. இன்னும் இத் தாற்பரியங்களைப் புரிந்த வந்தான் எனவே, அவன் யாருக்கும் தெரியாமல் ஊரை விட்டே கிளம்பியவன் அப்படியே இந்தச் சிறைக்கூடத்துள் வந்து சேர்ந்து ஐந்து ஆண்டுகளாகிவிட்டன. தான் இப்படி இந்த ஆசாமிகளுடன் வந்திருக்கக்கூடாது என்று இப்பொழுது சிந்திக்கவாரம்பிக்கிறான். தனது முட்டாள்தனத்தை நினைத்து துயரப்படுவதும் அழுந்துவதுமே அவனுக்குப் பகுதிநேர வாடிக்கையாயிற்று.

தன் வாலிப இதயத்தில் கருக்கொண்ட இலட்சிய தாகத்தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்ற விபரீத ஆசையில் அவன் பெற்றோர்கள் ஆக்ரோஷமாக அவனை எதிர்க்காதிருந்தால் - அவனுக்கு ஆக்கினை புரியாதிருந்தால்... அவனுடைய சமதர்ம இலட்சியத்துக்குக் குறுக்கே தடைபோடாதிருந்திருந்தால்... அவன் இப்படியெல்லாம் ஒரு தேசாந்திரியாக - ஏகாதிபத்தியர்களின் ஏவற்கலிகளில் ஒருவனாக ஆகியிருக்கமாட்டான்.

தன் பெற்றோர், உற்றோர், உறவினர், இனசனர் ஆகியோரால் தான் அடைந்த துன்ப துயரங்களையும், அவர்கள் அவனுக்குச் செய்த கொடுமைகளையும் இந்த அகால நேரத்திலே படுக்கையில் சரிந்திருந்து அவன் நினைவுபடுத்திய போது அவன் கண்கள் கலங்கிக் குமிழ்த்தன.

'நான் அன்று வீட்டை விட்டு வெளியேறியிருந்திருந்தால்... ?'

தான் பட்ட துயரங்களை - தனக்கெதிரான நிந்தனைகளை இனி நினைத்துப் பயன் என்ன என்றும் அவனுக்குப்பட்டது.

அந்த உத்தரிப்புகளை விலத்தாரித்து இரை மீட்டவனாக உடலைச் சுருக்கி உறங்கிவிட்டான்.

(வளரும்)

# யாழ். நீர்வளத் தன்மைகளும் பயன்பாட்டு அளவீடுகளும்




(சென்றவாரத்தொடர்ச்சி)

நீர் பயன்பாட்டைப் பொறுத்தவரை இன்னுமொரு முக்கிய விடயத்தையும் கவனிக்க வேண்டும். குடாநாட்டில் கிடைக்கும் எல்லா வகையான நீரும் ஒரே தரம் வாய்ந்தவை அல்ல. இதனால் கிடைக்கும் முழு நீரும் பயன்பாட்டில் வேறுபாடுடையவை. பாறைகளில் உள்ள கனி உப்புக்கள் கரைவதனால் நீரின் தரம் பாதிக்கப்படுகின்றது. பாறைகளினூடாக கடல் நீர் ஊடுருவுவதாலும் நீரின் தரம் குறைவடைகின்றது. கோடை, மாரி காலங்கள் பாறைகளின் கனி உப்புக்களின் இடப் பெயர்வுகளும் இடம்பெறுகின்றன. இவற்றாலும் பருவகால நீரின் தரவேறுபாடும் காணப்படுகின்றன. எனவே நீரின் உபயோகம் உப்புத்தன்மையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இவ் உப்புத்தன்மை பத்து லட்சத்தில் எவ்வளவு குளோறைட் அயன்கள் உண்டு என்னும் அளவை மூலம் அறியப்படுகின்றது. நீரின் தரம் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

அ) 100 பங்குக்கு கீழ் நீரில் குளோறையிட் இருப்பின் அந்நீர் மென்னீர்.

ஆ) 300 பங்குக்கு மேல நீரில் குளோறைட் இருப்பின் வன்னீர்.

இ) 150 பங்குக்கு குறைவாக நீரில் குளோறையிட் இருப்பின் அந்நீர் அருந்துவதற்கு மிகச் சிறந்த நீர்.

ஈ) 150-500 பங்காயின் சாதாரண குடிநீர்.

உ) 500 - 1000 பங்காயின் சவர் நீர்

ஊ) 20,000 பங்காயின் கடல்நீர்.

மேலே குறிப்பிட்ட நீரின் தர வகைகளில் இருந்து 500 ppm கொண்ட நீரே பயன்பாடு அதிகமுடைய நீராகும். எனவே எதை தரைகீழ் நீர் வளத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு நீர் தான் கூடிய உபயோகமுடையது என்பது புலனாகின்றது. இவ்வகையான நீரின் பயன்பாடு வீட்டுத் தேவை, விவசாயம், கைத்தொழில் சுகாதாரம் போன்றவற்றிற்காக இன்று அதிக அளவில் உபயோகப்படுத்துவதனால் வருடத்தின் எல்லாக் காலத்திலும் போதிய அளவு நீர் இல்லாமல் போகின்ற அபாயம் குடாநாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. சனத்தொகை மிகையாக பெருகிவருவதனால் நீர் பிரச்சினை எதிர்காலத்தில் மிகவும் பயங்கரமானதாக இருக்கலாம். இன்றைய நிலையில் கோடையில் குடாநாட்டின் பல பகுதிகள் வரட்சியின் கோரப்பிடிக்குள்

## பருவகாலங்களில் நீரின் தரமாற்றத்துக்கு கனி உப்புகளின் இடப்பெயர்வே காரணம்

சிக்கிய நிலையில் உள்ளன. இந்நிலைமை ஏனைய பகுதிக்கும் பரவலாம்.

நீர்ப்பிரச்சினை ஏற்படக் காரணம்:-

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் தொகை குறைவாக இருந்தகாலத்தில் நீரின் தேவை குறைவாக இருந்ததுடன் பயன்பாடும் கட்டுப்படுத்தப் பட்டதாக இருந்திருக்கின்றது. மேற்பரப்பிலும், தரையின் கீழும் சேமிக்கப்படும் நீரின் அளவு தேவைக்குப் போதுமானதாக இருந்தது. மேலும் மக்களது நீரினைப்பேணும் மனோபாவம் திருப்திகரமாக இருந்திருக்கின்றது. மேற்பரப்பில் பள்ளங்களை அமைத்தும், இயற்கையாக பாறையினுள் நீர் இறங்கும் பள்ளங்களைப் பாதுகாத்தும் வந்திருக்கின்றனர். இதனால் நீர்ப்பிரச்சினை தோற்றம் பெறவில்லை. நீரினைப் பெறும் வழிவகைகளும் பாரம்பரிய முறைகளே. இதன் மூலம் நீர்ச் சேமிப்பில் இருந்து நீர் வெளியேற்றம் அளவானதாக இருந்து வந்திருக்கின்றது ஆனால் பெருக்கமுறும் சனத்தொகைக்கு ஏற்ப வீட்டுத் தேவை, விவசாய, கைத்தொழில் தேவை, மற்றும் தேவைகளுக்கு அதிக அளவு நீர் இயந்திரங்களினால் வெளியேற்றப்படுகின்றது. விவசாய தேவைக்கு கூடிய அளவு நீர் உபயோகப்படுத்தப்படுகின்றது. குடாநாட்டில் இன்று ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட கிணறுகள் இருக்கின்றன. சீமெந்து தொழிற்சாலை, நகர குடிநீர் வழங்கல் போன்றவற்றிற்கும் பெருமளவு நீர் நாளாந்தம் எடுக்கப்படுகின்றது.

தற்போதைய வீடுகளில் (நவீன) நீர் இறைக்கும் இயந்திரங்களே பெரும்பாலும் உபயோகிக்கப்படுகின்றன. இந்நிலையில் உபயோகிக்கப்படும் நீரின் அளவு சேமிக்கப்படும் அளவிலும்கூடிய அளவாக உள்ளது. மழைகாலங்களில் நீர் சேமிப்பு வழிகள் பேணப்படாமை நீரின் சேமிப்பு குறைவடைந்தமைக்கு முக்கிய காரணியாக உள்ளது.

பெரும்பாலான நீரேந்து பள்ளங்கள் தூர்ந்து விட்டன. பொது சுகாதாரம் பேணுவதற்காக மழைகாலங்களில் வெள்ளம் நிலத்தில் தேங்காமல் வடிகான் அமைத்து வீணாக மழை நீரை கடலினுள் செலுத்தத் தொடங்கிவிட்டனர். மக்களின் மனோபாவம் மழை நீரை அப்புறப்படுத்துவதையே நாடி விட்டது. குடியிருப்பிற்காகவும், விவசாயத்திற்காகவும் மேற்பரப்புப்பள்ளங்கள் நிரவப்பட்டு நில மீட்சி செய்யப்பட்டமையும் நில நீர் குறைந்தமைக்கு காரணமாகும்.

பொதுவாக மக்களின் நீர்வளம் பற்றிய மிகக் குறைந்த அறிவு குடாநாட்டு நீர்வளம் பேணுவதன் முக்கியத்துவத்தை உணரச் செய்யவில்லை. மக்களின் மனோபாவம் நிலத்தின் கீழ் போதுமான நீரை கடவுள் படைத்துள்ளார். இதனை தொடர்ந்து இது கிடைக்கும் என்பதே. குடாநாட்டுப் பகுதியின் இயற்கைத் தாவரங்களின் தொகையும் குறைந்து வருகின்றது. தாவரப் போர்வை அதிகமாக இருக்கும் பொழுது கோடைகாலங்களில் நிலத்தில் இருந்து வெளியேறும் ஆவியாக்க செயல்முறையினால் நீரின் வெளியேற்றம் பெருமளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. இன்று குடாநாட்டில் இயற்கையாக வளரும் பனை, பெருமளவு வெட்டப்படுகின்றது மற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

எஸ் ரி.பி. இராஜேஸ்வரன் M.A
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக் கழகம்)

## நகைச்சுவை நவீனம் — வடக்கே போகும் ராமனுஜம்

★ நிக்கவயல் ★

தாய்நாடுநோக்கி..

திண்டிவனத்தில் இருந்து சென்னைக்குத் திரும்பிப் போவதை இலங்கேசன் விரும்பவில்லை.

இராமனுஜம் கப்பல் நின்றுவிட்டது என்ற எண்ணமே அவன் மனத்துள் குடைந்துகொண்டு இருந்தது.

திருச்சியில் இருந்து இருநூற்று ஐம்பது கிலோ மீற்றர் தூரம் பிரயாணம் செய்து சென்னை வந்தும் கடைசியில் திண்டிவனத்தைத்தான் அவனால் தரிசிக்க முடிந்தது.

கப்பல் ஓடவில்லை என்றால் இந்தியாவில்தான் இருக்கவேண்டும்; ஒரு நாளுக்குச் செலவு ஐம்பதுக்கு மேல் வேண்டும்.

யார்தான் உதவி? இருக்கின்ற காசு இரண்டாயிரம்தான் உதவி. கடத்தியவர்கள் தனது காசினைக் கொள்ளையடிக்காதது மிகவும் ஆறுதலாக இருந்தது அவனுக்கு

திண்டிவனத்தில் இருந்து திருச்சிக்கு மீண்டும் இலங்கேஸ் பஸ் வண்டியைப் பிடித்துக் கொண்டான். போன மச்சான் திரும்பிவந்த கதை தொடர்ந்தது.

சரஸ்வதி லாட்ஜ் மீண்டும் வரவேற்றது.

லாட்ஜ் மனேஜர் கேட்டார்! 'கலைஞரைச் சந்தித்தீர்களா'? இலங்கேஸ் சிரித்துக்கொண்டான். கலைஞரைச் சந்திக்க வந்து அகதி முகாமில் சேரவேண்டிய நிலை அவனுக்கு!

கப்பல் ஓடாதுவிட்டால் ஒரு சில நாட்களில் காசு முடிந்துவிடும்! அப்போது யார்தான் உதவிக்கு வருவார்கள்.

இவ்வாறு நினைத்துக் கொண்டு இருந்தபோது யானை ஒன்று லாட்ஜ் வாசலில் வந்து நின்றது. லாட்ஜ் மனேஜர் மூன்று நெய்த்தோசைகளை அதன் வாயில் வைத்தார் ஒரு கட்டு வாழைப் பழங்களையும் அதன் வாயில் திணித்தார்.

யானை நின்றுவிட்டு அங்கிருந்து அகன்றது. அதேசமயத்தில் 3 பிச்சைக்காரர்கள் லாட்ஜ் வாசலில் பிச்சைகேட்டு நின்றிருந்தார்கள்.

யாரும் அவர்களுக்குச் சில்லறைகளைக் கூட போடுவதாகத் தெரியவில்லை. இங்கு உள்ளவர்கட்கே இந்தநிலை [illegible] என்ன நிலை [illegible] விட்டால்..., நினைக்கவே அவனுக்கு தலை சுற்றியது. பதினைந்து நாட்கள் சென்றன.

கையில் இருந்த காசு எழுநூற்று ஐம்பது காலியானது.

கப்பல் ஓடப்போவதாக அறிவித்தல் வந்

### அத்தியாயம்-10

தது. இருந்த காசுடன் எப்படியாவது வீடு போய்ச் சேர்ந்துவிட [illegible] ராமேஸ்வரம் வண்டிக்கு அவன் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான் ரயில் ராமேஸ்வரத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

அரைத் தூக்கத்தில் இருந்து இலங்கேசைத் தட்டி எழுப்பினார் ரயில்வே சூப்பர்வைசர். 'உனது மூட்டை முடிச்சுக்களுக்கு லக்கேஜ் போட்டாயா' சூப்பர்வைசர் மிரட்டினார்.

அரைத் தூக்கத்தில் [illegible] ரூபாவை நீட்டினான் [illegible]

'தூக்கத்தைக் கலைத்து விட்டேன் போல' என்று வருத்தப்பட்டார் சூப்பர்வைசர்.

பணத்தால் ஆகாதது ஒன்றும் இந்தியாவில் கிடையாது என அவன் உள்மனம் சிரித்துக் கொண்டது.

இவை எல்லாம் அவனுக்குப் பழைய பாடங்கள். ரயில் ராமேஸ்வரத்தை வந்து அடைந்தது.

ரயில்வே நிலையம் யாரோ ஒருவரின் வருகையை எதிர்பார்த்து அமர்க்களப்பட்டது.

கொள்கைச் செல்வியே வருக .. பிரச்சாரப் பீரங்கியே வருக .... ஜெயலலிதாவே வருக எனப் பலர் கோஷமிட்டனர்.

ஆளுக்கு மேலே ஆள் விழுந்த பலர் ஓடினர். ஒருவர் பிடித்திருந்த கொடியை மற்றவர் பறித்துக்கொண்டு ஓடினார்.

ஒரு சிலர் இலங்கேசின் கேசை மிதித்துக் கொண்டு ஓடினார்கள்

'இலங்கைத் தமிழர்க்காகப் போர்க்குரல் எழுப்பும் செல்வியே வருக; இன்னொருவர் கோஷமிட்டார்.

இவைகள் எல்லாவற்றையும் தாண்டி சதாநாயகனும் ராமேஸ்வரம் மண்ணில் காலடி எடுத்து வைத்துவிட்டான்.

ஆவலுடன் இலங்கேஸ் ஒரு மனிதனைக் கேட்டான். கப்பல் ஓடுகிறதா? தம்பி .. பேப்பர்ச் செய்தியை நம்பி இங்கு பலரும் கப்பல் துறையை நோக்கி ஓடுகிறார்கள் ஆனால் கப்பல் ஓட இன்னும் இரண்டு வாரமாகும்

இதற்குள் எழுநூற்று ஐம்பது ரூபாய் பணம் காலியானது.

மிகுதியாக அவனிடம் இருப்பது ஐந்நூறுதான் அதில்தான் டிக்கட், வரி எல்லாம் கட்ட வேண்டும். அது போதாவிட்டால் வாங்கிய பொருள்களை விற்கவேண்டியதுதான்!

உண்மையாகவே கப்பல் ஓடப்போவதாக வந்த செய்தி அன்று ஒருநாள் காலை ஊர்ஜிதமானது. ஓட்டமும் நடையுமாக ஓடிய அவனுக்கு டிக்கட் இல்லை. பெண்கள் கைவிரிப்புக் கிடைத்தது 'ஹவுஸ் புல்' ஆகிவிட்டதாக அறிவிப்பு. ஒரு நாகர் சொன்னார். 'ஒரு நூற்று ஐம்பது தந்தால் டிக்கட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கவீனர்களும் மேதைகள் ஆகலாம்

## வாழ்வில் பற்றுதலும் விடாமுயற்சியும் இருந்தால் அவை உயர்வுக்கு ஏணி

திருமதி சரோஜினி கணேந்திரன்

கடந்த காலங்களில் வாழ்ந்து மறைந்த மாமேதைகள் தங்கள் பிக்கையில் கொண்டிருந்த விடாப்பிடியான பற்றுகள் மூலமே தமது ஆற்றலை வெளிப்படுத்தி தமக்குப் புகழ்தேடிக் கொண்டது மட்டுமன்றி மனிதகுலத்திற்கும் அளப்பரும் சேவையாற்றியுள்ளார்கள்.

வெற்றி பெற்ற மனிதர்களுக்கு பிரச்சினைகளே இருந்திருக்க முடியாது; எமக்கு இப்பிரச்சினைகள் இல்லாதிருப்பின் நாங்கள் அவ்வாறே வெற்றி பெற்றிருப்போம் என்றும் தமது குற்றங்களை மறந்து பலர் எம்மத்தியில் அங்கலாய்த்தவண்ணமிருக்கின்றனர். அதற்குக் காரணம் என்ன? அவ்வாறு வெற்றி பெற்ற பலரின் வாழ்க்கைப் பின்னணியை முற்றிலும் உணராத தன்மையே என்பது வெளிப்படை.

உடல் ஊனமுற்ற மேதைகள் பலரை இவ்வுலகம் உலவவிட்டிருந்தது அவர்களது மேதாவிலாசம் அவர்தம் ஊனத்தை விஞ்சிவிட்டதே அதற்குக் காரணமாகும். அந்த உடல் ஊனங்கள்தான் அவர்களது வெற்றிக்கு அடிப்படையாக இருந்தனவோ என்று வியக்குமாறு பலர் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

உலகில் மிகச்சிறந்த ஓவியக்கலைஞருள் ஒருவரான ஜோன் மில்டன் 1652 இல் தமது 44 வது வயதில் கண்பார்வையை இழந்தவர் அவ்வாறிருந்தும் அவர் தமது ஞானக்கண்ணின் துணை கொண்டு வடித்த கவிதைகள் பல அழியாப்புகழ் பெற்றன. 'இழந்த சொர்க்கம்', 'மீண்ட சொர்க்கம்' என்பன இவற்றுட் சில. இவரைப் போலவே புகழ்பெற்ற இசைசிற்பன்னர் பீதோவன் செவிடராக இருந்த போதுவே சிறந்த இசையமைப்பாளராக ஆனார். 'இவியட் ஒடிஸி' யாத்த ஹோமரும் ஒரு குருடரே.

ஹெலன் கெல்லர் என்ற புகழ்பெற்ற பெண்மணி ஐக்கிய அமெரிக்காவின் அலபாமாவில் பிறந்து 2 வருடங்களில் கண்பார்வையையும் செவிப்புலனையும் பின்னர் பேசும் சக்தியையும் இழந்தவர். ஹெலனை பிறெய்லி முறைமூலம் கற்பித்து ஆன் சலிவான் அவரை வாழ்க்கையின் உயர் ஏணியில் ஏற்றிவிட்டார். உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அங்கவீனமுற்றோருக்குப் பல வேலைத்திட்டங்களையும், பாடசாலைகள், பயிற்சிக் கூடங்கள் நிறுவி ஹெலன் இருளில் தவித்த ஆயிரக்கணக்கானோர் வாழ்வில் ஒளியேற்றினார்.

டொஸ்டொவ்ஸ்கி, டோல்ஸ்டோய் இருவரும் சித்திரவதை வாழ்க்கையை அனுபவித்திராவிட்டால் கீர்த்தி மிக்க நாவலாசிரியர்களாக உருமாறியிருப்பார்களோ என்னவோ. 'நான் இப்படியொரு அங்கவீனனாக இருந்திருக்காவிடில் நான் ஈட்டிய சாதனைகளை நிறைவேற்றியிருக்க மாட்டேன்' என்று கூறி பூமியின் உயிர்கள் பற்றிய கொள்கையின் அடிப்படையையே மாற்றிய விஞ்ஞானி வேறுயாருமில்லை; சார்ல்ஸ் டார்வின் அவர்களே.

ஜோன் கீற்ஸ், பைறன் பிரபு போன்றோரும் வதை குறைந்தோரே. சேர் வோல்டர் ஸ்கொட் எனப்படும் புகழ்பெற்ற வரலாற்று நாவலாசிரியர் பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்டு நோயையும் வேதனையையும் அனுபவித்தவாறே தமது படைப்புக்களை உருவாக்கினார்.

காசநோயால் வருந்தியவாறே 'புதையல்தீவு' போன்ற புகழ்பூத்த நாவல்களை யாத்தவர் ஆர். எல். ஸ்டீவன்சன். 'விதறிங்ஹயிட்ஸ்' என்ற நாவலை எழுதிய எமிலி பிறன்ட் என்பவரும் காசநோயாளரே.

கால் மார்க்ஸ் தமது முதுகில் ஏற்பட்ட நோயின் வேதனையைத் தாங்கியவாறே எழுத்துத்துறையில் ஈடுபட்டவர். முன்ஷி பிரேம் சாண்ட் என்ற இந்திய சிறுகதை எழுத்தாளர் தமது சிறந்த புத்தகங்களை ஒன்பது வருடகாலம் நீடித்த வயிற்றோட்ட காலத்திலேயே எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குருடர்களுக்கான எழுத்து முறையை உருவாக்கி குருடர்கள் பலரது வாழ்வுக்கு நம்பிக்கையேற்றிய லூயிஸ் பிறெய்லி தனது மூன்று வயதில் கண்பார்வையை இழந்தவராவர்.

போல் செசேன் என்ற கீர்த்திமிக்க ஓவியர் நவீன ஓவியத்தின் தந்தையென்று பாராட்டப்பட்டவர்—காசநோயினால் பீடிக்கப்பட்டு இறந்த மறுவருடமே அவரது படைப்புகள் மூலம் பாரிஸில் நடந்த கண்காட்சியில் நவீன ஓவியத்தில் முதன்மையானவராகப் பாராட்டப்பட்டார்.

ரேனோர் என்ற புகழ் பெற்ற பிரான்சிய ஓவியர் தமது சிறந்த படைப்புக்களைத் தந்தபோது தமது விரல்களால் தூரிகையைப் பிடிக்க முடியாதவராக இருந்தார். முடக்குவாதத்தால் கைகள் வழங்காத நிலையில் தூரிகைகளை தமது விரல்களில் கட்டச்செய்து இவ்வோவியங்களை ஆக்கினார் என்றால் அவரது முயற்சியையும் தன்னம்பிக்கையையும் என்னவென்பது.

பிரசித்திபெற்ற ரஷ்ய எழுத்தாளர்களில் செக்கோவ், மக்ஸிம் கோர்கி இருவரும் காசநோய் வாய்ப்பட்டவர்களே. கோர்கி பல ஆண்டுகள் ஒற்றைச் சுவாசப்பையுடன் வாழ்ந்தவர்.

அலெக்சாண்டர் கிரகாம் பெல்லும் காசநோயாளர். யூஜின் ஓனெல் என்ற மாலுமி காசநோயினால் பீடிக்கப்பட்டு ஆறு மாதங்கள் பாதுகாப்பு முகாமில் இருந்த காலத்தில்தான் சிறந்த நாடகங்களை எழுதி நோபல் பரிசு பெற்றார். சொமசட் மோம் திக்குவாயர் மட்டுமன்றி இரண்டு வருடங்கள் காசநோய்க்காக தனிமைப்படுத்திச் சிகிச்சை பெற்றவர்.

வாலிங்போட் என்ற ஆங்கிலேயர், நாடாளுமன்றத்தில் பிரதிநிதியாக இருந்தவர் கேம்பிரிஜில் இருந்தபோது ஒரு விபத்தில் முதுகெலும்பு முறியப்பட்டும் நாள் முழுக்க படுத்திருக்க வேண்டியிருந்தது. 8 வருடங்களில் தமது பட்டப் படிப்பை முடித்தார். இந்திய சிவில்சேவைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். 40 வருடகாலமாக இந்தியாவில் சிவில் சேவைக்குச் சேர்ந்தோரில் 50 வீதமானோரைப் பயிற்றுவித்து இங்கிலாந்தின் மிகப்பெரும் புகழ்பெற்ற நிறுவனமொன்றை நடத்திய பெருமை இவரையே சாரும்.

ஆர்தர் கவஸ் என்பவர் ஒரு முடவர். அவருடைய கால்கள் முழங்காலில் முடிவற்றன விரல்கள் முழங்கையில் அமைந்தன. இருந்தும் குதிரையேற்றம், படகோட்டம், ஓவியம் வரைதல் துறைகளில் பாண்டித்தியம் பெற்றார். தமது 17வது வயதில் அயர்லாந்தின் ஊர் சிறியொன்றின் போது சாரணத் தொண்டருக்கு கலந்து கொண்டார். 18 வது வயதில் போர்சியாவூடாக இந்தியாவுக்கு வந்து புலிவேட்டை ஆடுவதில் விசேட ஈடுபாடு கொண்டார். கடைசியாக பூனாவின் நில அளவை இலாகாவில் பணியாற்றினார். அயர்லாந்துக்குத் திரும்பியபோது மிகவும் சிறந்த கட்டிட வரைபடங்களை வரைந்து றோயல் டப்ளின் சொசைட்டியின் பதக்கம் பெற்றார். பின்பு ஒரு மாஜிஸ்ரேட் ஆகி திருமணம் செய்து நாரபிதாவாகி வெக்ஸ்போர்ட் நாடாளுமன்றப்பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டார். கடைசியாக இலண்டன் மேன்முறையீட்டு மன்றத்தின் அங்கத்தவரானார். முழுமையான கைகாலற்ற ஒரு மனிதனுடைய வரலாறு எப்படி அமைந்தது பார்த்தீர்களா?

இந்த வீர வரலாறுகள் ஊனங்களுடன் பிறந்த சாதாரண மனிதர்கள் மாமேதைகளானதையும் மனித சமூகத்திற்காக அளப்பெரும் பணிபுரிந்து வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட சிறப்பையும் பார்க்கும் போது வாழ்க்கை வாழ்வதற்கே என்ற ஆசையும் ஊக்கமும் எவருக்கும் பிறக்கவே செய்யும்.

நன்றி 'மிரர்'

## துணிவே வா!

துணிவே நீ எங்கோடித் தொலைந்துபோனாய்
—என்னை
தூக்கியுடன் நிமிர்த்திவிட ஓடிவாராய்!
துணிவோடு இப்புவியில் வாழச்செய்து
—எந்தன்
துயரத்தைத் தூக்கிஎறி விளையாடாதே!

பணிந்து தினம் பதுங்குகிறேன் ஐயோ இந்த
—மண்ணில்
பயம்பிடித்து அலறுகிறேன் வந்துபாராய்!
குனிவதுவும், கும்பிடுக் குமுறுவதும்—எந்தன்
குணமென்று ஊர்சொல்லிக் குழப்புதண்ணே?

வருவதெல்லாம் வரட்டுமென வாழநெஞ்சில்
—எனக்கு
வலுவளித்தால் உன்வலிமை குறைந்தா போகும்?
தெருவிறங்கி நடப்பதற்கே நாணியிங்கே!
—நான்
தினம் நடுங்கிப் பதுங்குவதை வந்து பாராய்!

வாழ்வதற்கு வந்துவிட்டால் சாவுமங்கே
—தேடி
வந்துவிடும் இதுதானே உலக நீதி!
சாவதற்கு ஏனெனது இதயமிங்கே—நடுங்கி
சதாகாலம் அழுகிறதோ புரியவில்லை!

உடலழியும் அதற்குள்ளே ஊஞ்சலாடும்—நம்
உயிரழிக்க எவராலும் முடியாதண்ணே!
மடநெஞ்சம் இதையறிந்தும் கேட்டிடாமல்
—என்னை
மண்டியிட வைக்கிறதே துணிவே வாராய்

செ. குணரத்தினம்

## பொன்மொழிகள்

சுதந்திரத்தைக் காக்க விரும்புபவன் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும்.
- நார்மன் தாமஸ்

சோம்பல் ஒருவனது குலத்தில் குடியிருக்குமானால் அது பகைவர்க்கு அவனை அடிமைப்படுத்திவிடும்.
- தமிழ் முதுமொழி

★

தாக்கமும் தக்கமும் ஏற்படாத குறையுமாப்போதே ஒருவன் மேதையாகிறான்.
- மகாத்மா காந்தி

# மனதுக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப் பாவலன்

## விபுலானந்தர் விரும்பிய முதுதமிழ்ப் புலவர்

கதிர் சரவணபவன்

தமிழுலகின் கண்ணே இன்தமிழின் இலக்கியங்களை வகுத்து அவற்றின் செழுமை மணம் கமழப் பொருள் சேர்த்து இசை கூட்டிச் சுவை சேர்த்து யாத்து எம் மத்தியில் தமிழின் செழுமையை விளக்கச் செய்த பழம் பெரும் புலவர்களையும் இலக்கிய கர்த்தாக்களையும் இலக்கண வல்லுநர்களையும் தமிழ் அறிஞர்களையும் நாம் நினைவு கூருதல் சாலச் சிறந்த தொன்றாகும். அத்தகையோரின் வரிசையிலே வட்டுக்கோட்டை மண்ணிலே வாழ்ந்து மறைந்த 'முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அவர்களும் ஒருவராவார்.'

இவர் தனது பதினெட்டாவது வயதில் தெல்லிப்பளையில் அமைந்துள்ள போதனா முறைப் பயிற்சி நிலையத்தில் 'நாலடியார், திருக்குறள், பிரபந்தங்கள், நன்னூல், சின்னூல் முதலியவற்றுடன் ஆங்கில மொழியையும்' நல்லமுறையிலே கற்றுத்தேறினார். இவரது பத்தொன்பதாவது வயதிலே பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராய் வெளிவந்து வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றியபின் இருபத்திரண்டாவது வயதிலே கொழும்பு சாஹிராக் கல்லூரியிலே ஆசிரியராய் அமர்ந்தார். இவ்வேளையிலே தன்னுடைய ஆங்கில அறிவை மென்மேலும் வளர்க்கத் தவறினாரில்லை.

'தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையாபிள்ளை அவர்களிடம் தொல்காப்பியம் முதலாம் இலக்கண நூல்களையும், சங்க இலக்கியங்களையும் ஐயம் திரிபறக் கற்றார் பத்திரிகைகட்குக் கட்டுரைகள் எழுதுவதிலும் இலக்கண ஆராய்ச்சிகளைச் செய்வதிலும் பாடசாலைச் சிறுவர்களுக்கான நூற்றுருக்களை வெளியிடுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். சுவாமி விபுலானந்தர், ரா. பி. சேதுப்பிள்ளை, சோமசுந்தரப் புலவர், பெரியதம்பிப்பிள்ளை ஆகியோர் கூட்டாக எழுதிய 'உரைநடைச்சிலம்பு' என்கின்ற கட்டுரைத் தொகுப்பில் இவருடைய 'ஆருயிர் தந்த அரும் பெறலாளி' என்னும் கட்டுரையும் இடம் பெறுகின்றது. இது போன்ற கட்டுரைத் தொகுப்புக்களையும் நூல்களையும் வெளியிட்டுள்ளமைக்கு மேற்கூறிய கட்டுரை சான்று பகர்கின்றது. இவர் எழுதிய சிறுவர் நூல்களுள் 'ஈழவாசகம்' 'செமிழ்ப் பயிற்சி' 'பாலபோதினி' என்பவை அரசினர் வகுப்புக்குரிய பாடப்புத்தகங்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. சாஹிராக் கல்லூரியிலே இவர் ஆற்றிய சிறந்த சேவையும், மதிநுட்பமும் தமிழிலே வெளியிட்ட வெளியீடுகளும், திறமையும் இவரைச் சாஹிராக்கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகத் தரமுயர்த்த ஏதுவாயிருந்தது. இவர் இத்தோடு நின்றுவிடாமல் சைவப் பிரசங்கங்கள் செய்வதிலும், தமிழ்ப் பிரசங்கங்கள் செய்வதிலும், நூல்கள் எழுதுவோர்க்கு உதவிகள் புரிவதிலும் சிறந்து விளங்கினார்.

சுவாமி விபுலானந்தர் அவர்களுடைய தொடர்பும் பேரன்பும் இவருக்குக் கிடைக்கப்பெற்றது. இவருடைய புலமைகளையும் திறமையுணர்வையும் ஆய்ந்து கண்ட சுவாமி விபுலானந்தர் அவர்கள்—

மனதுக்கினிய பெருங்குணத்து நல்லதம்பிப் பாவலன் எனும் அழியாத செய்யுளால் நற்சான்று பகர்ந்துவிட்டேன் என்கின்ற தொடர் கடிதத்தின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

இவர் தனது 40 ஆவது வயதில் தென்னிந்தியப் புனிதத்தலங்கட்கு யாத்திரையை மேற்கொண்டு, அங்கு சொற்பொழிவுகள் ஆற்றி தென்னிந்தியாவின் கண்ணே வாழ்ந்த தமிழ் பேரறிஞர்களுடன் தொடர்பு பூண்டு அவர்களோடு உரையாடித் தமிழிலே ஆய்வு மேற்கொண்ட வேளையில் இவருக்கு தென்னிந்தியத் தமிழ்ச் சங்கத்தினரால் இவரது பாவன்மையையும் நாவன்மையையும் போற்றுகின்ற நோக்கோடு 'முதுதமிழ்' புலவர் என்ற பட்டமளித்து கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

இவருடைய 49 ஆவது வயதில் ஓய்வு பெற 50 ஆவது வயதில் பல்கலைக் கழக விரிவுரையாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது 54 ஆவது வயதில் அரசினரால் நடத்தப்பட்ட 'மரதன்' அஞ்சலோட்டக் கவிதைப் போட்டியில் முதல்பரிசு பெற்றமையின் காரணமாக கொழும்பு சாஹிராக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தினர் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர். இம் மரதன் அஞ்சலோட்டக் கவிதைப்போட்டி 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த புலவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட போட்டி என்பதும் இத்தகைய புலவர்களின் வரிசையிலே எண்ணப்பட வேண்டியவரை இன்று நினைவு கூராது இருப்பதும் வருத்தத்துக்குரியது. இவரது இந்நூல் 'மணித் தாய்நாடும் மரதன் ஓட்டமும்' என்பதாகும். இந்நூலின் முதற் பதிப்பு அரசினரால் வெளியிடப்பட்டது இரண்டாவது பதிப்பு

(7ஆம் பக்கம் பார்க்க)

முதுதமிழ்ப் புலவர் திரு மு. நல்லதம்பியின் நினைவுதினம் இம் மாதம் 8ஆம் திகதியாகும் அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது

## வடக்கே...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துத் தருவேன்'

எப்படியாவது ஊர் சென்று விடவேண்டும் என நினைத்து இலங்கேஸ் மேலதிகமாக நூற்று ஐம்பதை இழந்தான். டிக்கட் காசு வேறு.

ஏமாற்றம் இல்லாது டிக்கட் கிடைத்தது. ஐம்பது ஐந்து ரூபா டிக்கட். அது கிடைப்பதற்கு லஞ்சம் நூற்று ஐம்பது. மிகுதியாக இருந்த காசு மூன்று தான். அவனது பெட்டிகளையும் பொருள்களையும் சோதனையிட்ட சுங்கப்பகுதி அதிகாரி சொன்னார். 'நீங்கள் கொண்டு செல்லும் பொருள்களுக்கு டியூட்டி ஐந்நூறு'

அழுவதா சிரிப்பதா என நின்று கொண்டிருந்த இலங்கேசை நோக்கி போர்ட்டர் ஒருவர் போனார். தம்பி.... ராக்கை கட்டக் காசு இல்லையென்றால் ஐந்து கோடம்பாக்கம் சீலையையும் தா. நான் இருநூறு தருகிறேன் வேறு வழியின்றிச் சேலைகள் மலிவு விலையில் விற்பனையாகின.

இந்த மலிவு விற்பனையைப் பார்த்தும் பாராதது போல இருந்தார் ஒரு கஸ்டம்ஸ் அதிகாரி.

இன்னும் இலங்கேசிடம் மிஞ்சியிருந்தது சில சாரங்களும் எவர்சில்வர்ப் பாத்திரங்களுமே.

மூன்று மணிநேரத்தில் இராமனுஜம் கப்பல் தலைமன்னாரை அடைந்தது அங்குள்ள குடிவரவுச் சோதனையிட்ட கஸ்டம்ஸ் உத்தியோகத்தர் இரண்டு லெப்ஸ் சாரங்களைப் பிடுங்கிக்கொண்டார்.

தலைமன்னார்ச் சுங்கத் திணைக்களத்திற்கு வெளியே காலடி வைத்த இலங்கேசிற்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிருந்தது.

இலங்கேஸ் யாழ்ப்பாணம் செல்ல வழி இன்றித் தலைமன்னாரில் தெரிந்த பஸ்காரர்களை நினைத்துக் காத்து இருக்கிறான்.

(முற்றும்)

யாவும் கற்பனை

## பண்டிதமணி....

(5ஆம் பக்க தொடர்ச்சி)

முதலியார் யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலை பார்த்தவர். அவர் தமது குதிரைவண்டியோடு புலவர் அவர்களை எதிர்பார்த்திருந்து ஏற்றிவரும் போதும், ஏற்றிப் போகும் போதும் கேட்டுப் படித்தவை அதிகம். அவருடைய குதிரை நாவலர் வித்தியாசாலையைக் கண்டதும் தானாகவே நின்றுகொள்ளும் வழக்கம் பழகிக் கொண்டது.

நாவலர் வித்தியாசாலை சைவமும் தமிழும் வளர்ப்பதில் வெகுவாக ஈடுபட்டிருந்த காலத்தில் புலவர் அவர்களே அதிலே நிலைக்களனாயிருந்தார். சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் செந்தமிழ்ப் பரிபாலன சபையினை ஆரம்பித்த காலத்தில், சபையின் பிரமாணங்கள், உப விதிகள் முதலியவற்றைத் தயாரித்த புலவர் அவர்களின் விவேகத்தை அறிந்த தமிழச்சத் மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தார், தமக்கு வேண்டிய சங்க யாப்பையும் புலவர் அவர்களை உசாவியே தயாரித்தனர்.

புலவர் அவர்கள் யாப்பைத் தயாரிப்பதற்கு உதவி செய்ததோடு, சங்கத்தின் வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டி, நாட்டிலுள்ள புலவர்களை வந்து கூடித் தமிழ் வளர்க்குமாறு ஊக்குவித்துப் பாடினார்.

### ஆசிரிய விருத்தம்

பூவரசு தொழு'மரசு ராமநாத
புரவரசு கொடையரசு புகழ்போ பெற்குந்
தாவரசு ராசரா சேக ரட்போர்த்
தனியரசு தமிழரசு தக்கோர் சங்கம்
பேவரசு மதுரைநகர்த் தமிழின் சங்க
மேலரசாய் வீற்றிருக்கு மேன்மை தந்த
தேவரசு நான்காடக் கூடல் வைகுந்
திருவிளையாட்டரசபதஞ் சென்னிசேர்ப்பாம்.

### கட்டளைக்கலித்துறை

தமிழ் செழுராச ராசே சுராதி தொன்மதுரைச்
சங்கம் புரப்பவ ஞவினன் கேண்மின் தமிழ்ப் புலவீர்
சங்கம் வளரும் தமிழ்நூல் வளரும் தமிழ்ப்புலவர்
அங்கம் வளரும் தமிழும் வளரும் அசைவிலவே

—வளரும்—

## யாழ். நீர்வளத்...

(5ஆம் பக்க தொடர்ச்சி)

மும் புளி, இலுப்பை, வேம்பு, பனை, மகோக்கனி, ஆல், அரசு, மா போன்ற மரங்களும் குறைந்து வருகின்றன இவற்றினை மக்களின் நடவடிக்கை நிமித்தம் வெட்டப்படுகின்றன ஆனால் மீளவும் நடப்படுவதில்லை. இவற்றின் விளைவாகவும் தாவரப் போர்வை குறைந்து ஆவியாக்க செயன்முறையினால் நீர் நிலத்தில் இருந்து வெளியேறி நீர்த் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

எனவே குடாநாட்டுப் பிரதேசம் உவர் நீருக்குள் சூழப்பட்டுள்ளது. இந்த உவர் நீர் உள்நாட்டிற்குள்ளும் ஊடுருவும் நிலைமையும் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவு நன்னீர்ப் பகுதிகள் உவர்நீர்ப்பகுதிகளாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் பெருமளவு விவசாய நிலங்களும் தரமிழக்கத் தொடங்கி விட்டன. உதாரணமாக காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கு வேண்டிய பெருமளவு நீர் உயர் வேக நீர் இறைக்கும் இயந்திரங்களினால் தொடர்ந்து எடுக்கப்படுவதால் சூழவுள்ள பகுதிகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துவிடுவதுடன் கடல் நீர் ஊடுருவி உள்நாட்டுப் பகுதிகளுக்குள் வந்து விடுகின்றன.

இதனால் நன்னீர்க் கிணறுகளின் நீரின் தரம் வெகுவாக குறைந்து விடுவதுடன் கோடைகாலங்களில் நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட பெருமளவு விவசாய நிலம் வரட்சியடையும் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், பெருமளவு இயற்கைத் தாவரங்களும் அழியும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. உவர் உட்புகுவதனால் கோடைகாலங்களில் ஆவியாதல் செயன்முறை மூலம் உப்புக்கள் நில மேற்பரப்பிற்கு கொண்டு வரப்படுகின்றன. இதனால் விவசாய நிலங்கள் பாழடைகின்றன (தொடரும்)

## விஞ்ஞானத்தின்..

(4ஆம் பக்க தொடர்ச்சி)

கடிகாரங்கள் மிகக் குறைந்த விலையில் பல நாடுகளிலும் செய்யப்படுகின்றன ஆனாலும் இவற்றுக்கு முன்னோடியாக இருந்தது சுவிற்ஸர்லாந்து நாட்டுக் கடிகாரமான டிக் டிக் கடிகாரமேயாகும்.

இ. தவபாலன்
யாழ் மத்தியகல்லூரி.

## மங்கையர்க்குத் தனி அரசியாக...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் மறுமைக்கு நற்பலன் ஏற்படத்தக்க முறையில் சிவசிந்தனை, சிவவழிபாடு, சிவதொண்டு ஆகியவற்றில் மன்னனை ஈடுபடச் செய்தார். பாண்டிமாதேவியார் பட்டத்தரசியாக விளங்கிய காரணத்தால் மரபுவழி நின்று நாட்டிற்கு நற்பணியாற்றும் பொறுப்பு அவருக்கிருந்தது. சைவநெறியில் சித்தம் செல்லா நிலையுடையவர்களாக நாட்டு மக்கள் விளங்கினார்கள். தென்னவன் தெளிவற்ற மனநிலையுடையவனாக விளங்கினான். ஆகவே தனது சாதுரியமான பேச்சு வன்மையால் அடக்கமாகவும், ஆணித்தரமாகவும் உரையாடி மன்னனையும் மக்களையும் சைவசமயத்தை தழுவச் செய்தார்.

மதுரையில் ஞானத்தின் திருவுருவாக திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்த மடத்திற்கு சமணர்கள் தீயிட்ட பொழுது அரசியாரின் மங்கலகரமான வாழ்வு நீண்டகாலம் தொடர்ந்திருக்க வேண்டும் என விரும்பியமையினால் பாண்டியனோ... திருஞானசம்பந்தர் பாடியருளியமை அவரின் சமயப் பணியின் உயர்வை எடுத்துக்காட்டுகிறது. பாண்டிய மன்னனுடைய நோயைத் தீர்க்க ஞானக்குழந்தை அங்கு எழுந்தருளியிருந்த பொழுது மன்னனருகே பல சமணர்கள் கூடிநின்றார்கள். மங்கையர்க்கரசியார் மனக்கவலையுடன் காணப்பட்டார். அப்பொழுது அவருடைய கவலையை நீக்கும்முகமாக 'மானினேர்விழி—' என்ற பதிகத்தைப் பாடியருளினார். புகலிவேந்தருடைய புனித வாக்கால் பாடல் பெறும் தவமுடையவராக மானியார் விளங்கினார். நின்றசீர் நெடுமாறனுக்கு சைவ வழித்துணையாய் நெடுங்காலம் விளங்கிய பெருமையும் அவருக்கு உரியது.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் திருமுறைகளிலும், சேக்கிழார் பெருமானுக் புராணத்திலும் போற்றப்பட்டுள்ளார் என்றால் அவருடைய பெருமை செப்பும் தரமன்று. 'அம்புயமலராள்' என்றும் 'செங்கமலத் திருமடந்தை' என்றும் சேக்கிழாரும், 'பங்கயச் செல்வி' என்று ஞானசம்பந்தரும் மாலக்ஷ்மிக்கு நிகராக மங்கையர்க்கரசியாரைப் பாடியுள்ளனர். சகல செல்வங்களையும் தந்தருளும் மாலக்ஷ்மி போல பாண்டிநாட்டிற்கு திருநீற்றுச் செல்வத்தைக் கொடுத்த பெருமை அரசியாருக்குரியது. இருள் சூழ்ந்த மதுரை மீண்டும் சிவப்பொலிவு பெற்று விளங்கியது. பாண்டிய மன்னர்கள் தமிழையும் சைவத்தையும் நீண்டகாலமாக வளர்த்து வந்தனர். அவர்கள் ஆலவாய் அண்ணலின் மெய்யடியார்களாக இருந்து சைவசமயத்தை பேணிப் பாதுகாத்தனர். எனவே பாண்டிய மன்னனுடைய மதமாற்றம் அவர்களுக்குப் பெரும் பழியை ஏற்படுத்தியது. தென்னர் குலம் பழிதீர்த்த தெய்வப்பாவை என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் சுவாமிகள் குறிப்பிடும் முறையில் அவர் பணி அமைந்திருந்தது. பாண்டிமாதேவி இருபெரும் அரசவம்சங்களின் புகழைப் பேணி நிலைநாட்டி, இவன் திருநீற்றினை வளர்த்த காரணத்தால் திருஞானசம்பந்தர் தனது திருப்பதிகத்தில் பலமுறை அவருடைய பணியைப் பற்றிப் பாடியுள்ளார்.

மணிமுடிச்சோழன் மகளாகவும், வழுதிக்கு மாபெருந் தேவியாகவும் விளங்கிய பாண்டிமாதேவி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தன்மையடைந்ததால் 'எம் தெய்வம்' என்றும் தெய்வப்பாவை என்றும் சேக்கிழார் பெருமானால் பாடப்பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

